# ஜெகஜீவனுடன் மொரார்ஜி பேச்சுவார்த்தை


★ ★

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர் 19 பங்குனி 13 ரபி ஆகிர் 5 இதழ்- 41

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-3-77


புதுடில்லி, மார்ச் 25

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமைச் சந்தித்து ஜனதா கட்சியுடன் இணைவது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தையின் போது திருமதி விஜயலட்சுமி பண்டிட், திரு. பகுகுணா ஆகியோரும் இருந்தனர்.

அரசுடன் ஜனநாயக காங்கிரஸ் கட்சி இணையவேண்டுமென்று மொரார்ஜிதேசாய் விரும்புவதாகவும், இப்புதிய பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறின.

## அரசுடன் சேருமாறு அழைப்பு

இன்று வெள்ளிக்கிழமை புதிய மந்திரிசபையின் சில உறுப்பினர்கள் விபரம் வெளியிடப்படும் என நேற்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அறிவித்திருந்த போதிலும் இரவு 12 மணிவரை இது பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு கவர்னர் ராஜினாமா! ஹண்டே இவர்மீது புகார்

### தேர்தலில் ஒருபக்கச் சார்பாக இருந்தாராம்

சென்னை, மார்ச் 25

தமிழ்நாடு கவர்னர் மோகன்லால் சுக்காடியா தமது கவர்னர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இன்று இவரது ராஜினாமா பற்றி அறிவிக்கப்பட்டது.

முன்னராக டாக்டர் எச். வி. ஹண்டே தமிழ்நாடு

(8-ம் பக்கம் பார்க்க)

# மூதறிஞர் 'செல்வா' தொடர்ந்து மயக்கம்!

## இரவு பகலாக டாக்டர்கள் சிகிச்சை

### கோவில்களில் விசேஷ வழிபாடு, பிரார்த்தனை

யாழ்ப்பாணம் சனி

**மூதறிஞர் செல்வநாயகம் கடந்த மூன்று தினங்களாக தொடர்ந்து மயக்க மடைந்த நிலையிலேயே இருக்கின்றார். அவசர சத்திர சிகிச்சைக்குப் பின்னரும் அவர் மூர்ச்சை தெளியாத நிலையிலேயே சிகிச்சை பெற்றுவருகிறார்.**

தந்தை செல்வாவைக் காப்பாற்றுவதற்கு டாக்டர்கள் இரவுபகலாகச் சகலமுயற்சிகளும் எடுத்து வரும் அதே நேரத்தில் ஆதரவாளர்கள் கோவில்களில் விசேஷ வழிபாடுகள் பிரார்த்தனைகள் செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 16-ம் வார்ட்டிலுள்ள தனியான குளிரூட்டப்பட்ட அறையில் தந்தை செல்வாவுடன் டாக்டர்கள் நர்சுகள் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இரண்டுடாக்டர்க நான்குள் நர்சுகள் வீதமாக இரவு பகலாக தந்தை செல்வாவுக்குச் சிகிச்சையளித்து வருகின்றனர்.

வைத்திய நிபுணர்கள் அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை சென்று உடல் நிலைமை பற்றி பரிசோதனை செய்து வருகின்றார்கள்.

வைத்திய அத்தியட்சகர் திரு. அமரசிங்கம் அடிக்கடி வந்து தேவையான வசதிகளையெல்லாம் செய்துகொடுத்து ஊக்கமளித்துவருகிறார்.

இவர்களுடன் வார்ட் டாக்டரும், இரவுபகலாக முழு ஒத்துழைப்பையும்வழங்குகின்றார்.

கடந்த புதன்கிழமை 9 மணிக்கு மயக்கமடைந்த தந்தை செல்வா இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மூர்ச்சை தெளியாத நிலையிலேயே இருந்துவருகிறார்.

மூர்ச்சை தெளியும் எனடாக்டர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், உடல் அசைவுக்கான அறிகுறிகளை, வைத்த கண் வாங்காமல் டாக்டர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (சு-அ)

## சத்திரசிகிச்சைநிபுணர்கள் இன்று மீண்டும் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், சனி

மூதறிஞர் செல்வநாயகத்தைக் கவனிக்கும் பொருட்டு மூளை நரம்பு சத்திரசிகிச்சைநிபுணர் டாக்டர் கப்ரால் மீண்டும் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். அரசாங்கத்தின் ஏற்பாட்டின் மீது இவர் கொழும்பிலிருந்து மீண்டும் இங்கு வருகிறார்.

அத்துடன் கண்டி பெரியாஸ்பத்திரியிலிருந்து சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ந. சுப்பிரமணியத்தையும் உடனடியாக யாழ்ப்பாணம் செல்லுமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவரும் இன்று காலை யாழ்ப்பாணம் வந்துசேர்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஆ)

## அழுது, அழுது மூதாட்டி மயக்க முற்றார்

யாழ்ப்பாணம், சனி

மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராசதுரை நேற்று யாழ். பெரியாஸ்பத்திரியில் மூதறிஞர் செல்வநாயகத்தை பார்த்துக் கண்ணீர்விட்டார். கவலையைக் கட்டுப்படுத்த முடியாமல் வாயைப் பொத்திக்கொண்டு மூதறிஞர் செல்வாவையே சில நிமிடங்கள் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

திரு. இராசதுரையுடன்

(7-ம் பக்கம் பார்க்க)

## அறிவுதிரும்ப ஒருசில நாட்கள் செல்லலாம்

### வைத்திய அத்தியட்சகர் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின், இருதயத்துடிப்பு, சுவாசம் ஆகியவை சரியானமுறையில் செயல்படுகின்றன. ஆயினும் அவருக்கு இன்னும் அறிவுதெளியவில்லை.

யாழ். பெரியாஸ்பத்திரி 16-ம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவரும், மூதறிஞர் செல்வநாயகத்தின் உடல்நிலை பற்றி வைத்தியஅத்தியட்சகர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சத்திரசிகிச்சைக்கு முன் அவருக்கு இருந்த ஆபத்தான நிலையில் இப்போது திருத்தம் இருக்கின்றது.

அவரின் உயிருக்கு உடனடி ஆபத்து என்று கூறுவதற்கு அறிகுறிகள் இல்லை. அறிவு ஏற்பட ஒருசில நாட்கள் செல்லலாம். வைத்திய நிபுணர்கள் இரவுபகலாக அவரைக் காப்பாற்றுவதில் அயராது உழைத்துவருகின்றனர். இதுவிடயத்தில் சகல விதமான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுவருகிறது. (சு-ஆ)

## 80-வது பிறந்த தினம் 31-ம்திகதி விசேடவழிபாடுநடக்கும்

யாழ்ப்பாணம், சனி

மூதறிஞர் செல்வநாயகத்தின் 80-வது பிறந்த நாளான இம்மாதம் 31ம் திகதி (வியாழக்கிழமை) சகல தொகுதிகளிலும் உள்ளகோவில்கள், தேவாலயங்கள், மசூதி ஆகியனவற்றில் தந்தைசெல்வாவின்உடல் நலனுக்காகநடத்தப்படவுள்ள விசேடபூசைகளுக்கான ஒழுங்குகள் துரிதமாக நடைபெறுகின்றன.

அவ்வத்தொகுதி தமிழர்விடுதலைக்கூட்டணி எம். பி.க்கள், தமிழர் கூட்டணிஆதரவாளர்கள், இளைஞர் பேரவையினர், மகளிர் பேரவையினர் இதில் அக்கறைகாட்டிவருகின்றனர்.

31ம் திகதி செல்வாவின் பிறந்த நாளன்று அவரின் சுகத்துக்கு பிரார்த்திக்குமாறு தமிழ்மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஆ)

## வட பகுதியில் கூட்டணி கூட்டங்கள் யாவும்31-ம்திகதிவரை ரத்து

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் இம்மாதம் 31-ம் திகதிவரை ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சகலகூட்டணிக் கூட்டங்களும் இளைஞர் எழுச்சிக் கூட்டங்களும் கருத்தரங்குகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகத் தமிழர் கூட்டணித் தலைமைப்பீடம் நேற்று அறிவித்துள்ளது.

நாளை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டணிப்பொதுக் கூட்டமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தொகுதியில் இன்றும் நாளையும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சகல கருத்தரங்குகளும் எழுச்சிக்கூட்டங்களும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

கூட்டணி -அபேட்சகர் நியமனக்குழு இன்று யாழ்ப்பாணத்தில் கூடுவதாக முன்னர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நியமனக்குழுவில் இடம்பெற்றுள்ள மூதறிஞர் செல்வநாயகமும், திரு. எம். சிவசிதம்பரமும் சுகவீனமுற்றிருப்பதால் இக்கூட்டமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இன்று நடைபெறவிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் கிளிநொச்சி, வவனியாத் தொகுதிகளில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இளைஞர்பேரவை எழுச்சிக்கூட்டங்களும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

### வடமராட்சியில்

நெல்லியடி, சனி

தந்தை செல்வாவுக்கு ஏற்பட்ட திடீர்சுகவீனத்தின் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை உடுப்பிட்டித்தொகுதி ஏழு இடங்களிலும் பருத்தித்துறை கடற்கரை மைதானத்திலும் நடைபெறவிருந்ததமிழ் இளைஞர் பேரவையின் கருத்தரங்குகள் யாவும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன.

## நாச்சிமார்கோவிலடி கூட்டம் ரத்து

வண்ணை நாச்சிமார் கோவிலடியில் இன்று மாலை நடைபெறவிருந்த அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டம் தந்தை செல்வாவின் சுகயீனம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ஆ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு 39
விளாவை கோவிந்தர் கந்தையா கைம்பெண்
காரைநகர் பொன்னம்மா
வாதி

எதிராக
பாலாவோடை முருகேசு இராமலிங்கம்
காரைநகர். பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு39-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம்ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி (25-4-77) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 2,625/-ம், 23-3-76 தொடக்கம் 20-9-76 வரைக்கும் ரூபா 1900/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 509-79 சதமும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை 'கான்னற்' நில. பர. 27½ இத்தரையும் பனைகள் வீடுகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கண்ணகை அம்மன் கோவிலினுதனம் மேற்கு செல்லத்துரை அம்பலவாணரின் ஆதனம், தெற்கு சண்முகம் கைம்பெண் காசுபதியினுதனம். இதடங்கலிற் சொரியலாய் (½) அரைவாசியும் அதற்குரியவைகளும். முற் பதிவு சி 443/73.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
14-3-77.

5783

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B/14197
தற்பொழுது 1. வைத்தியநாதர் பாலசிங்கமும்
மானிப்பாய் 2. பெண் இராசம்மாவும்
வாதிகள்

எதிராக
தற்பொழுது 1. நடராசா பிரணவசொருபமும்
கயிலாசபிள்ளையார் 2. பெண் வடிவாம்பிகையும்
மேற்கு வீதி,
நாவலர் றேட்டு,
யாழ்ப்பாணம். பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/14197-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 28-ந் திகதி (28-4-77) வியாழக்கிழமைகாலை 10-30மணி தொடக்கம்அந்தந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 12,327/-ம், 16-11-73 தொடக்கம் 1-8-74 வரைக்கும் ரூபா 7,000/-க்கு 8 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 5 வீத வட்டியும், வழக்குச்செலவு ரூபா 625-75 சதமும் இதில் தீர்வையில் ரூபா 3,000/-ம் செலவில் ரூபா 200/-ம் கழிக்கவும்.

### ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனை இறை 'செண்பகக்குமாரன்புலம்' நில. பர. 24 கிணற்றுப்பங்கும் அதனைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு சிவநாதன் பெண் சிவானுகூலத்துக்கும மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு குறிப்பிடும் 3-ம் ஆதனம, மேற்கு குமாரசாமி பெண் சூடாமணிக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைகளின்படி யடங்கலும். ப. இ. C 290/64.

2. ஷெ இறை 'செண்பகக்குமாரன்புலம்' பர. நெல். 20. கிணற்றுப்பங்கும் அதனைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு சிவநாதன் பெண் சிவானுகூலத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு முன்னுறுதிப்படி முருகேசு பெண் மரகதத்துக்கும் கிரித்தோப்பிள்ளை பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு குமாரசாமி பெண் சூடாமணிக்குரிய ஆதனம், தெற்கு குறித்த 1-ம் ஆதனம் இவ்வெல்லைகளின்படி யடங்கலிற் சொரியலாக எட்டிலேழு (7/8) பங்கும் பதி இ C 290/65.

செ. பண்டித்துரை,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
14-3-77.

5782


## "பண்ணும் பரதமும்"

[முத்திங்கள் சங்கீத பரதநாட்டியச் சஞ்சிகை]

N. C. G. E., N. C. O. M. S.
மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி

ஒரு வருடச் சந்தா
[தபாற் செலவு உட்பட] ரூபா 8/-

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

கௌரவ செயலாளர்
இலங்கை இசைப் பேரவை
மே/பா, கலாநிலையம் லிமிட்.,
303, கே. கே. எஸ். வீதி :-: யாழ்ப்பாணம்.


### கல்வி

G. C. E. A/L விஞ்ஞான பாடங்கள் N.C.G.E. விஞ்ஞானம் கணிதம் H.N.C.E. விஞ்ஞானம், கணிதம் வர்த்தகவியல், ஆங்கிலம், பேச்சு ஆங்கிலம்- சிறந்த பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். இடம்: கில்னர் மண்டபம், காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தினம் 4--6 மணிக்கு அல்லது ஞாயிறு 10 மணிக்கு பதிவு செய்யவும். 5766

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## கேள்விப்பத்திர விளம்பரம்

கீழே விபரிக்கப்படும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு இந் நகராட்சிமன்ற சபையில்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. மகிழங்கேணியில் கொல்களம் அமைத்தல்.
2. பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதியில் 500 அடி நீளம் உதை சுவர் அமைத்தல்.

கேள்விப் பத்திரங்கள் 7-4-77-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும், கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின்மேற் பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு சித்திரை மாதம் 18-4-77-ந்திகதி திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு முன் இந்நகராட்சி மன்றச் சபையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

இது பற்றிய விதிகளும் விபரங்களும் இன்னும்அறியவிரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் மராமத்து அத்தியட்சகரிடம் அறிந்து கொள்ளலாம்.

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்றஅலுவலகம்,
சாவகச்சேரி.
23-3-77 5788

## நெல்லியடி பட்டினசபை
## ஆதனவரி பற்றிய அறிவித்தல்
### 1977-ம் ஆண்டு 1-வது கந்தாயம்

1977-ம் ஆண்டு 1-வது காலாண்டு முடியவுள்ள இறை மதிப்பு வரி நிலுவைகள் யாவற்றையும் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதிக்கு முன்பதாக இச்சபை அலுவலகத்தில் செலுத்தி முடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 1977-ம் ஆண்டு 1-வது காலாண்டுக்குரிய இறைமதிப்புவரி 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் பட்சத்தில் குறித்த காலாண்டுக்குரிய இறைமதிப்பு வரியில் 10% வெளியாத்துக் கட்டணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் மேலும் இத்தால் அறியத்தருகின்றேன்.

செயலாளர்.
நெல்லியடிப் பட்டினசபை,

நெல்லியடிப் பட்டினசபை,
கரவெட்டி.
24-03-1977. 5794

# சிறுவிளம்பரம்

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

61, புங்கங்குளம்வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் வைத்தியநாதன் நடராசாவின் மரணசாதனப்படி

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 327

வி. நடராஜா கைம்பெண் சிவபாக்கியவல்லி, 61, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
விண்ணப்பகாரர்

1. திருமதி எக்கம்மா இராமலிங்கம், காரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
2. டாக்டர் சி. வைத்தியநாதன், நியூசிலாந்து.
3. திருமதி விவேகசுந்தர் கனகசபாபதி, இல: 4, எபேர்ற் பிளேஸ், காவலக் டவுன், கொழும்பு 5
4. திருமதி ஜெயலக்ஷ்மி பாலகிருஷ்ணன், தபாற்கந்தோரடி, தெல்லிப்பளை.
5 சுப்பரமணியம் பாலகிருஷ்ணன், தபாற்கந்தோரடி, தெல்லிப்பளை.

பிரதிவாதிகள்

280-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததின் பேரில் 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எவராவுதல் எதிர்க்காரணம் காட்டினலன்றி 1965-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ந் திகதி கே. சோமசுந்தரம் பிரசித்த நொத்தாரிஸ் முகதாவில் 8361-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அதன் மூலப்பிரதி இப்போது இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதுமான மரணசாதனத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும் மேற்படி மரணசாதனத்தில் சொல்லியவாறு நிறைவேற்றுனராக விண்ணப்பகாரன் அதிகாரத்தைப் பெறுவதற்கு உரிமை உடையவரென்றும் அவ்வண்ணமே மரணசாதன அதிகாரப்பத்திரம் விண்ணப்பகாரனுக்கு வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

1977-ம் ஆண்டு மாசி மாதம் 10-ந் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். 5790

### விற்பனைக்கு

கிளிநொச்சிப்பகுதியில் உருத்திரபுரத்திற்கு அருகாமையில் இரண்டுபோகம் வேளாண்மை செய்யக்கூடிய 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 5769, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.
5769

A 8 கார் இல CY 5671 விற்பனைக்குண்டு. சொந்தப் பாவிப்பில் உள்ளது. மேலதிக விபரங்களுக்கு அ. ஜெயலிங்கம், 27, செட்டித்தெரு, நல்லூர் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 5792

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள Imperial model (Standard Size) ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. ரூபா 950/-கிட்டிய விலையில் விபரங்களுக்கு:- சின்னத்துரை சிங்கி, நாமகள் 2 வது ஒழுங்கை. பொற்பதிறேட், கொக்குவில். 5786

### தேவை

புதிய வேப்பம்விதை, இலுப்பம் விதை, ஆமணக்கம் விதை தேவை. வைத்திருப்போர் தொடர்புகொள்ளவும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.
5780

தையல் வேலைகள் பழக்குவதிலும், தையல் வேலை செய்வதிலும் மிகத்திறமை வாய்ந்த பெண்மணிகளும். நெசவு வேலையில் திறமையுடன் செய்யக் கூடிய பெண்மணிகளும் உடன் தேவை. 30-3-77 காலை 10 மணிக்கு தொடர்பு கொள்ளவும். விபரங்கட்கு சுன்னகம் மத்திய சந்தைக்கு முன்பால், ஸ்ரீ கிருஸ்ணு றேடியோ வேக்ஸ் உள்ளே. உரிமையாளர் ரஞ்சிதாதையல் நிலையம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னகம்.
5793

றோயல் டிஸ்பென்சறிக்கு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 5765

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல்ய தச்சுத் தொழிற்சாலை ஒன்றுக்கு வேலைதெரிந்த தொழிலாளிகளும். வேலைபழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. நேரடியாகத் தொடர்புகொள்க: மெற்றில் தச்சுத்தொழிற்சாலை. 93, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
5778

### கல்வி

G C E A/L விலங்கியல் வகுப்பு உடன் ஆரம்பமாகும். விபரங்களுக்கு பிரான்சிஸ் கில்னர் மண்டபம் காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 5767

## ச. ச. நிலையம்

கல்வியங்காடு, வெள்ளி கட்டப்பிராய் கலைமணி சனசமூகநிலைய 28-வது ஆண்டு நிறைவுவிழாவையொட்டிவிளையாட்டுப்போட்டிகள் ஏப்ரல் 2-ம், 3-ம் திகதிகளில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் ஒன்றனபேச்சுப்போட்டி 2-ந்திகதி சனியன்று நிலையக்கட்டடத்தில் மாலை நடைபெறும்.

பேச்சுப்போட்டிகள் மூன்று பிரிவுகளில் நடத்தப்படும். இப்போட்டிகளில் பரிசுபெறுபவர்களுக்கு ஆண்டுவிழாவன்று பரிசில்கள் வழங்கப்படும்.
(உ)

# "மக்கள் அச்சமின்றி வாழ்ந்தாலே ஜனநாயகம் நிலைக்கும்"

## இந்தியப் பிரதமர் மொரார்ஜி

புதுடில்லி, மார்ச் 25
"மக்கள் அச்சமின்றி வாழ்ந்தால்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியும்" என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கருத்துத் தெரிவித்தார்.

இந்தியாவின் பிரதமராக நேற்றுப் பதவியேற்றுக் கொண்டபின் திரு. மொரார்ஜி தேசாய் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேசினார்.

நிருபர்களின் கேள்விகளுக்குப் பிரதமர் பதிலளித்தார்.

அரசியல் சாசனத்தில் செய்யப்பட்ட அவசியமற்ற திருத்தங்கள் நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று பிரதமர் சொன்னார்.

நெருக்கடி நிலையை அனுபவித்துக் களைத்துவிட்டோம் மீண்டும் அப்படியொரு நிலை ஏற்படாமல் நாம் செயல்படுவோம் என்று திரு. மொரார்ஜி கூறினார்.

சட்டத்துறையில் தலையீடு இருக்காதென்றும் அது சுயேச்சையாக இருக்குமென்றும் கூறிய பிரதமர் மொரார்ஜி தேசாய் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றார்.

அவசரகால நிலையின் போது சிலர் அளவுக்கு மிஞ்சியமுறையில் தமது அதிகாரத்தைப் பாவித்திருப்பது பற்றி விசாரணை செய்யப்படுமா என்ற கேள்விக்கு பிரதமர் பதலளிக்கையில் சம்பவங்களைக்குறிப்பிட்டுப் புகார்கள் தெரிவிக்கப்பட்டால் அவைபற்றி விசாரணை செய்யப்படும்.

சிறுபான்மையினர் கமிஷன் ஒன்று நியமிக்கப்படுமென்றும் பிரதமர் சொன்னார்.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ளபடி மதுவிலக்கு அமுல் செய்யப்படு மென்றும் பிரதமர் மொரார்ஜி கூறினார்.

வறுமையை ஒழிப்பதும் வேலைவாய்ப்பின்மையை நீக்குவதும் தமது அரசின் குறிக்கோள் என்று கூறிய பிரதமர்



மொரார்ஜி பத்து வருடங்களுக்குள் இதைச் சாதிக்கலாமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

எல்லா நாடுகளுடனும் நட்புறவுடன் வாழ்வதுதான் தமது அரசின் கொள்கையென்றும் பிரதமர் கூறினார்.

### மொரார்ஜிக்கு இந்திரா வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 25
திரு. மொரார்ஜி தேசாய் இந்தியாவின் நான்காவது பிரதமராகப் பதவியேற்றதும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கடிதம் அனுப்பினார். இந்திராவின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துப் பிரதமர் மொரார்ஜி தேசாய் பதில் அனுப்பினார். இத்தகவலை திரு. மொரார்ஜியே பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

### 'இந்தியைத் திணியோம்'

புதுடில்லி, மார்ச் 25
"இந்தி மொழியை எவருடைய தொண்டைக்குள்ளும் வலுக்கட்டாயமாகத் திணிக்க மாட்டோம்" என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் உறுதியளித்தார்.

ஆனால் நாட்டு மக்கள் தேசாபிமானத்துடன் தேசிய மொழியான இந்தியைத் தாமாகவே முன்வந்து கற்றுக்கொள்வார்களென்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

# புற்றுநோயாளர் துயர்நீக்கும்

## புனிதப்பணியில் யாழ். லயன் கழகம்

### களியாட்டு விழாவில் மாவட்ட கவர்னர் பாராட்டு

நல்லூர், வெள்ளி
"யாழ்ப்பாணத்தில் புற்றுநோயினால் கஷ்டமுறும்நோயாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் புற்றுநோய் சிகிச்சை பெறுவதற்காக அடையும் கஷ்டத்தை நாம் நன்கு அறிவோம் இக்கஷ்டத்தை நீக்க யாழ் லயன் கழகம் முன்வந்துள்ளது பாராட்டுதற்குரியது" என்று சர்வதேச லயன் கழகத்தின் 306ம் மாவட்ட கவர்னர் திரு. பிரான்சிஸ் ஏ. வர்ணகுலசூரியா யாழ் லயன் களியாட்டு விழாவில் இடம்பெற்ற மாட்டு வண்டிச் சவாரிப்போட்டிப் பரிசளிப்புநிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்

'ரோறு' ஸ்தாபன ஆதரவில் நடைபெற்ற இந்த மாட்டு வண்டில் சவாரி பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு யாழ் லயன் கழகத் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. சி. மகேசன் தலைமை தாங்கினார்.

திரு. வர்ணகுலசூரியா மேலும் பேசுகையில், "யாழ்ப்பாணத்தில் ஒரு புற்றுநோய் ஆஸ்பத்திரி அத்தியாவசியமென உணர்ந்த யாழ். லயன் கழகத்தினர் இதற்கான நிதியைத் திரட்டுவதற்காக இக்களியாட்டு விழாவை சிறப்புற ஒழுங்கு செய்திருந்தனர். இவ்விழா சிறப்பாக அமைய சிறந்த திட்டங்களைத் தீட்டிய கழக உறுப்பினர்களுக்கும் இவ்விழாவிற்கு ஆதரவளித்த பொது ஸ்தாபனங்கள், அரசாங்க நிறுவனங்கள், மக்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுகள் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ரசிகர்களைக் கவரும் விதத்தில் நடத்துவதற்கு மூல காரணமாயிருந்த 'ரோறு' ஸ்தாபனத்திற்கும் நன்றி தெரிவிக்கிறேன்"

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி வர்ணகுலசூரியா பரிசில்களைவழங்கினார்.

### அட்வாணி ராஜினமா

புதுடில்லி, மார்ச் 25
ஜனதா கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து திரு. அட்வாணி ராஜினமாச் செய்துகொண்டார்.

கட்சியின் தலைவர் தெரிவில் அவர் அதிருப்தி தெரிவித்துக் கொண்டார்.

ஜனதா கட்சியின் தலைவர் தெரிவு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்று சோஷலிஸத் தலைவர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் தெரிவித்துள்ளார்.

### கற்கடதீவு உற்சவம் இன்று

ஆனைக்கோட்டை, சனி
கற்கடதீவு புனிதஅந்தோனியார் ஆலயவருடந்த உற்சவம் இன்றுஆரம்பமாகி நாளை திருப்பலிபூஜைதிருசெருபசுற்றுபிரகாரபவனியுடன் விழாமுடிவடையும்.

மேற்படிஉற்சவத்தை நெடுந்தீவுக்கட்டளைகுரவர் வணபிதா றெஜிஇராஜேஸ்வரன் நடாத்திவைப்பார்.

யாத்திரிகர்களுக்கு குருநகர் இறங்குதுறையிலிருந்து இலவச போக்கு வரத்து வசதிகளும் குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் (அ)

# 90 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பரிசு பெற்றோர்

யாழ் லயன் களியாட்டுவிழாவில் சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட் ஆதரவில் நடைபெற்ற 90 மைல் சைக்கிள்ஓட்டப்போட்டி வவுனியா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி யாழ் விளையாட்டரங்கில் முடிவடைந்தது.

50க்கு மேற்பட்ட வீரர்கள் பங்குபற்றிய சைக்கிளோட்டப் போட்டியில்ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒருகோஷ்டியாகவே வீரர்கள் சைக்கிள்களைச் செலுத்தி போட்டி முடியும் இடத்திற்கு இருபதுக்கு மேற்பட்ட வீரர்கள் குறுகிய வித்தியாச தூரத்தில் வந்தமை ரசிகர்களைக் கவர்ந்தது.

90மைல் சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம் வருமாறு:

ஏ. ஜி. கொன்ஸ்ரன்தைன், வி. சுமதிபாலன், ஏ. தங்கராசா, ஜி. ஏ. யோகேஸ்வரன், கே. சிவராசா, செங்கண்ணன் சாமிலையா. (ஆ)

# "மௌனமான அகிம்சைப் புரட்சி". மொரார்ஜி

புதுடில்லி, மார்ச் 25
'மகிழ்ச்சிகரமான பாரதத்தை உருவாக்குவதற்கு மக்கள்அரசுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டும்' என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் வேண்டுகோள் விடுத்தார்.

ஜனதாகட்சி ஆட்சிக்கு வந்ததையொட்டி ராம்லீலா மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பெருந்திரளானமக்கள்குழுமியிருந்த இக்கூட்டத்தில் பிரதமர் மொரார்ஜிதேசாய் பேசுகையில், நடந்து முடிந்த பொதுத்தேர்தலும் அதனால் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் மௌனமானஅகிம்சைப்புரட்சி என்று வர்ணித்தார்.

நிர்வாகத்தில் தவறுகள்நடந்தால் அதைப் பொதுமக்கள் துணிவுடன் சுட்டிக்காட்ட வேண்டுமென்றும் தவறுகளைத் திருத்திக்கொள்ளத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் பிரதமர் மொரார்ஜி கூறினார்.

ஜனநாயக காங்கிரஸ்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் இக்கூட்டத்தில் பேசுகையில் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுவிட்டதென்றும் இனி அது பேணிப் பாதுகாக்கப்படுமென்றும் சொன்னார்.

திரு. அப்துல்பிகாரிவாஜ்பாயி பேசுகையில் ஜனநாயகத்துக்கு உலைவைத்தவர்கள் தூக்கி எறியப்பட்டுவிட்டார்கள் என்று கூறினார்.

ரேபரேலி எம். பி. திருராஜ்நாராயண் பேசுகையில் இந்தத் தேர்தலில் ஜனதாகட்சி ஈட்டிய வெற்றி எதேச்சாதிகாரத்துக்கு எதிராகக் கிடைத்த வெற்றி என்றார்.

### இருஉறுப்பினர் மந்திரிசபை

திருவனந்தபுரம், மார்ச்25
கேரளத்தில் இரண்டு உறுப்பினர்கொண்ட மந்திரிசபை இன்று பதவியேற்றது.

திரு. கருணாகரன் முதல் அமைச்சராகப் பதவியேற்றார். ஜனாப் முகம்மதுகோயாவும் அமைச்சராகப் பதவியேற்றார். இவர் முஸ்லிம்லீக் தலைவராவர்.

# "ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவோம்"

## திருமலையில் ஸ்ரீஸ்கந்தராஜா

திருகோணமலை, வெள்ளி
"தமிழ் இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் இயங்கவேண்டும். எம்மத்தியில் பிரிவினை உருவாக்காது, ஏற்பட்டுள்ள ஒற்றுமையை இன்னும் உறுதிபடுத்தும் நடவடிக்கைகளில் தமிழ் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்."

450 நாட்கள் சிறையில் இருந்து அண்மையில் விடுதலையான திரு. சே. ஸ்ரீஸ்கந்தராஜா, திருமலை, திரியாய், சாம்பல்தீவு தமிழ்மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டங்களில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஸ்ரீஸ்கந்தராஜா மேலும் பேசுகையில், "எனது இளம் வயதிலே இருந்து தமிழின விடுதலை எண்ணத்தை மனதிற்கொண்டு உழைக்கின்றேன். யாரை வேட்பாளர்களாகப்போடுவது என்ற பிரச்னையில் தமிழ்இளைஞர்கள்

[7-ம் பக்கம் பார்க்)

## தமிழ்நாடு மக்கள்

# சினிமாக் கவர்ச்சியில் மயங்கியதுவேதனை தருகிறது

யாழ்ப்பாணம், சனி
'நாட்டிற்கு நல்லது செய்தவர்களை ஒதுக்கி வெறும் சினிமாக்கவர்ச்சியில் மயங்கி தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்திருப்பது வேதனைக்குரியது' என்று ஐக்கியதேசியக் கட்சியின் மானிப்பாய்த் தொகுதி பிரதம அமைப்பாளர் திரு. அலோசியஸ் இந்தியதேர்தல் முடிவு குறித்து நமது நிருபரிடம் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

'தமிழ்நாட்டில் தேர்தல் முடிவுகள் மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இல்லாதிருக்கின்ற போதிலும் முப்பது ஆண்டுகள் ஆட்சிநடத்திவந்த காங்கிரசை இறக்கி ஜனநாயகத்தின் காவலர்கள்உள்ள ஜனதா முன்னணியிடம் மத்திய அரசுப் பொறுப்பைமக்கள் ஒப்படைத்ததன்மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டார்கள்' என்று திரு. அலோசியஸ் மேலும் சொன்னார் (உ)

### ஜெயப்பிரகாஷ் இந்திரா சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 25
சர்வோதய தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் நேற்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை சென்று சந்தித்தார். ஒரு மணி நேரம் அவர்கள் இருவரும் பேசினர்.

### இன்று விவசாயக் கருத்தரங்கு

நல்லூர், சனி
உடுவில் விவசாயக் கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுவின் ஆதரவில் இன்று சனிக்கிழமை காலை கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுத்தலைவர் திரு. குமாரசாமி விநோதன் தலைமையில் உடுவில் விவசாயக்கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் விவசாயக் கருத்தரங்கில் கொழும்பு கெமிக்கல் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்டைச் சேர்ந்த திரு. வி. பாலசிங்கம் விவசாயக் கருத்துரைகளை வழங்குவார். (அ)

### திருமதி பண்டிட் ஜன. காங்கிரஸில் சேர்ந்தார்

புதுடில்லி, மார்ச் 25
திருமதி பண்டிட் விஜயலட்சுமி ஜனநாயகக் காங்கிரஸில் சேர்ந்து கொண்டார்.

அமரர் நேருவின் சகோதரியும் திருமதி இந்திரா காந்தியின் மாமியாருமான திருமதி விஜயலட்சுமி பொதுத் தேர்தலின் போது இந்திராவுக்கு எதிராக ஜனநாயக காங்கிரஸுக்கும் ஜனதா கட்சிக்கும் ஆதரவாகப் பிரசாரம் செய்தார்.

## மணிவாக்கு

ஒழுங்கு, தியாகபுத்தி, பணிவு, திடசித்தம் ஆகிய குணங்களை அளிப்பதில் உண்ணாவிரதத்திற்கும் பிரார்த்தனைக்கும் உள்ளதைப் போன்ற சக்தி வேறு எதற்கும் கிடையாது.
—மகாத்மாகாந்தி


# ஈழநாடு
THE EELANADU


## புதிய சகாப்தம்

இந்திய அரசியலில் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. முப்பதுவருட காங்கிரஸ் ஆட்சிநீங்கி ஜனதா கட்சி ஆட்சிபீடத்துக்கு வந்திருக்கிறது. புதிய சகாப்தம் தொடங்கியிருக்கிறது.

காந்தியவாதியும் முதுபெரும்அரசியல்வாதியுமான திரு. மொரார்ஜி தேசாய் பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார்.

ஜனதாகட்சித் தலைவர் தெரிவில் ஜனநாயக காங்கிரஸ் திருப்தியடையவில்லை. ஜனதாகட்சிச் செயலாளரும் அதிருப்தியடைந்து தமது பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

ஜனதாகட்சி, ஜனநாயக காங்கிரஸ், அகாலிதளம் ஆகிய மூன்று கட்சிகளின் எம். பிக்களும்கூடி தலைவராகத் திரு. மொரார்ஜிதேசாயைத் தெரிவு செய்தனர். ஏகமனதாகத் தெரிவு நடைபெற்றது, ஆனாலும் இந்த நிகழ்ச்சியை ஜனநாயககாங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் பகிஷ்கரித்திருக்கிறார்.

ஜனதாகட்சி அரசாங்கத்தில் திரு. ஜெகஜீவன்ராமின் ஜனநாயககாங்கிரஸ் சேரமாட்டாதென்பது தெளிவாகிவிட்டது.

542 தொகுதிகளைக் கொண்ட இந்திய ஆட்சிமன்றத்தில் 271 தொகுதிகளைக் கைப்பற்றிய ஜனதா கட்சி அறுதிப் பெரும்பான்மைப்பலம் பெற்றிருக்கிறது.

பஞ்சாபில் எட்டுத்தொகுதிகளைக் கைப்பற்றிய அகாலித்தளம், ஜனதா கட்சிக்குப் பூரண ஆதரவு வழங்க உறுதியளித்திருக்கிறது.

ஜனதாகட்சி அரசாங்கத்தில் ஜனநாயகக் காங்கிரஸ் சேராமல் தனிக் கட்சியாக இயங்கினாலும்கூட ஜனதா கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக திரு. ஜெகஜீவன்ராம் உறுதியளித்திருக்கிறார்.

ஆனாலும் தலைவர் தெரிவு காரணமாக ஜனதா கட்சிக்கும் ஜனநாயகக் காங்கிரசுக்குமிடையில் ஆரம்பத்திலேயே ஏற்பட்டுள்ள பிளவு புதிய அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுக்கக் கூடும்.

என்றாலும் ஜனதா கட்சியில் மற்றும் சில மாநிலங்களைச்சேர்ந்த காங்கிரஸ் எம். பிக்கள் வந்துசேரலாமென்று எதிர்பார்க்கலாம்

இப்பொழுதே சில மாநிலங்களில் கட்சிமாறத் தொடங்கியிருக்கிறார்கள்.

எனவே ஜனநாயகக் காங்கிரசும் சோஷலிஸ்தலைவர் ஜோர்ஜ் பெர்னண்டசும் ஜனதா கட்சி அரசுடன் சேராவிட்டாலும், ஆதரவளிக்காவிட்டாலும் கூட ஜனதாகட்சி கட்டுக்கோப்பாக இருக்குமானால் மத்தியில் ஸ்திரமான அரசாங்கம் இருக்குமென்பது நிச்சயம்.

மகாத்மா காந்தியின் சமாதி முன் பிரதிக்ஞை எடுத்து அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

தேசிய ஒற்றுமை தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிப்பது, சிக்கன வாழ்க்கை, காந்திவழியில் செல்வது ஆகியவைகளே ஆளும்கட்சியினர் எடுத்துக் கொண்ட உறுதிமொழியாகும்.

இந்தியாவில் ஜனநாயகம் சிறந்துவிளங்கி அந்தநாடு சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் முன்னேறிச் சென்றால் அயல்நாடான இலங்கைக்கும் பாதுகாப்பும் முன்னேற்றமும் தானகவே ஏற்படுமென்று எதிர்பார்ப்பது தவறல்ல.

## "இறைவழிபாட்டால் கைதிகள் தேறலாம்"

யாழ்ப்பாணம், சனி

"ஆன்மீக சக்தி வளரும்போது நாம் வாழ்க்கையில் விடும் தவறுகளை உணரமுடிகிறது" என்று சைவப் புலவர் வ. கந்தசாமி யாழ் சிறைச்சாலை முருகன் கோவிலில்இந்து சமயக் கைதிகளுக்காக நடாத்தப்பட்டுவரும் கந்தபுராண உபந்நியாச நிகழ்ச்சியில் பேசும்போது கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"கலகத்தைத் தீர்க்கும் வன்மை படைத்தது கந்தபுராணம். தேவர்கள் சூரபத்மனால் சிறைவைக்கப்பட்டுக் கஷ்டமுற்றனர். தெய்வ வழிபாட்டை மறந்து வாழ்ந்த தேவர்களுக்கு இவ்வின்னல் ஏற்பட்டது. சிறையிலிருந்து இறைவனை வழிபட்டனர். தமது தவறுகளை உணர்ந்து கொண்டு சிறைச்சாலையைத் தவச்சாலையாக்கினர், அது போன்று சிறைக்கைதிகளும் சந்தர்ப்பம் எற்படும்போதெல்லாம் இறைவனை வழிபட்டு, பிழைகளை உணர்ந்து திருந்துவதற்கு சிறைச்சாலை வழிவகுத்துள்ளது.

"நீதிநூலாகிய திருக்குறளை ஓதியுணரவேண்டும். திருமுறைகளைப் பாராயணம் செய்யவேண்டும். சிறையை விட்டு வெளியேறும்போது அருள்ஒளி மிகுந்த வாழ்க்கையை நடாத்த முற்பட வேண்டும்," (உ)

### பஸ்சேவைக்கு இடைஞ்சல்:

## 5 பெரு மரங்களுக்கு ஆயுள் முடிகிறது

மட்டுவில் வெள்ளி

கல்வயல் பெருங்குளம் வீதி ஊடாக புதிய இ. போச. பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதைத் தொடர்ந்து நூற்றாண்டுகாலமாக நிலைபெற்றிருந்த ஐந்து பாரிய மரங்களுக்கு முடிவுகாலம் வந்துவிட்டது.

தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் உட்பட பல அதிகாரிகள் வந்து இந்தப் பாரிய மரங்களைநேரில் பார்வையிட்டனர்.

இவை வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக அமையும் என்றும் இவை அடியோடு வெட்டப்படவேண்டுமெனவும் இவர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததைத்தொடர்ந்து இவைகளை வெட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (உ)

# இசையின் நோக்கமும் நாம்பெறும் பயனும்

— திருமதி மாதினி சிறீக்கந்தராசா [பி. ஏ.]

இசை என்றாலும் சங்கீதம் என்றாலும் ஒன்றுதான். மொழிப்போர் காரணமாக ஒரு சிலர் சங்கீதம் என்ற சொல்லை விரும்ப, மற்றச் சிலர் இசை என்ற சொல்லை இரசிக்கக் காண்கிறோம். பழந்தமிழ் இலக்கியத்தில் இசை என்ற சொல்தான் காணப்படுகிறது. இசை எனப்படுவது கருத்துப் பரிமாற்ற நிலைகளுக்கு அப்பாலுஞ் சென்று, ஒருவரது உள்ள உணர்வினை மற்றவருக்குப் பரிமாற்றி, அதன் விளைவாக, உள்ளங்கள் இசைதலாகிய ஒரு செயலைச் குறிக்கின்றது. அதாவது உள்ளங்களிரண்டை அல்லது மேற்பட்டவற்றை ஒன்றுடனென்று ஒன்ற, இசைய வைப்பது இசை. இவ்வாறு நான்கூறும்போது, இசை என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறிவிட்டதாக நான் கொள்ளவில்லை. இசைக்கு இலக்கணம் கூறுவது எளிதான ஒன்றல்ல. உள்ளத்தின் பக்குவத்திற்கேற்பவே இசையும் உணரப்படும். எனக்கு இசையாக இருப்பது உங்களுக்கு வசைச்சொற் கூட்டமாகவோ, "மடாமடா" ஒலித்திரட் கூச்சலாகவோ இருத்தலும் கூடும். உளப்பக்குவத்தையும் மனநிலையையும் பொறுத்து இது அமைகிறது எனலாம். மதுரை மணி ஐயரின் சங்கீதத்தை "ஆரடா ஒருவன் முக்கி முக்கி உளறுகிறான்" என்று யாரோ ஒருவர் கூறியதை நான் கேட்டிருக்கிறேன். அவ்வாறு கூறியவர் மீதும் தவறில்லை. ஏனென்றால் அந்த இரசிகருடைய மனப்பக்குவம் அவ்வாறு இருக்கையில், அவரிடமிருந்து அதற்கு மேற்பட நாம் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

இசை அழகுக் கலைகளுள் தலையாயது என்பதை மறுப்பவர் இல்லை. ஆனால் கலைக்கெல்லாம் தலையாக உள்ள இசை உண்மையில் ஓர் அறிவியலும் கூட. ஏனென்றால் ஆராய்ச்சி, பரிசோதனை, பட்டறிவு என்றவற்றை அடிப்படையாக வைத்துத்தான் எல்லா இசைகளும் வளர்ந்தன குறிப்பாகத் தமிழிசை வளர்ந்தது அப்படித்தான். முத்தமிழின் ஒரு கூறான இயற்றமிழுக்கு எழுத்து, சொல், அணி என்பன எவ்வாறு அடிப்படைகளாக அமைந்தனவோ, அவ்வாறே சுரங்கள், சுருதிகள் என்பன இசைக்கு அடிப்படை ஆக்கக்கூறுகளாக அமைந்துள்ளன. பகுத்தறிவைப்பற்றி மனிதன், இன்றைய மனிதன் ஏதேதோ பேசுகிறான். எல்லாவற்றுக்குள்ளும் பகுத்தறிவைப் புகுத்திக் குழப்புகிறான், சமயத்திற்குள்ளும் (Test Tube) நியாயம் பேசுகிறான். ஆனால் வெறும் நியாயத்துக்கும். தருக்கவியலுக்கும் அப்பாற்பட்ட சங்கதிகள் சில உள்ளன என்பதை மறந்துபேசுகிறான். நாம் பகுத்தறிவினால் மட்டும் வளர்ந்துவிடவில்லை. எம்மைமேலும் மேலும் விண்ணை நோக்கி விரையும்படி தூண்டுவது உணர்ச்சி, உணர்வுகள். மனிதனிடையே உணர்ச்சியை வெகு சுலபமாக அருட்டக்கூடிய சாதனங்களுள் சந்தமும் இராகமும் முன்னணியில் நிற்கின்றன. எம்முடைய உடல் சந்தமெனப்படும் இலயத்துக்கு ஆட்பட, ஆட்பட எமது உள்ளம் இராகத்துக்கு அடிமைப்படும்.

இசையின் தனிச்சிறப்பை உணரவேண்டுமானால் அதனை ஏனைய அழகியற்கலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல்வேண்டும். சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன நம்முடைய கண்ணின் வழியே நுழைந்து நமது கருத்தினைக் கவர்கின்றன. இலக்கியமோ கண்ணின் வழியேயும் காதுகளின் வழியேயும் நுழைந்து நம்முடைய கருத்தைக் கவர்கின்றது. சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் என்பன நேரடியாகவே பொருளைச்சுட்டி உணர்த்துகின்றன. அவ்வாறு உணர்த்துவதன் விளைவாக, எங்களுடைய அகத்திலேஎழும்புகின்ற கருத்தோவியங்கள், எண்ண ஓவியங்கள், நமக்கு இன்பம் தருகின்றன. ஆனால் இசையானது நம்மைக் கவருகின்ற முறை வேறு. இசை நேரடியாக ஒரு பொருளைச் சுட்டுவதில்லை. பொருள் சுட்டாத (non Connotative) உணர்வைத் தருகின்ற கலை இசை ஒன்றுதான். இந்த ஈடிணையில்லாப் பண்பிலேதான் இசையின் பெருமை தங்கியுள்ளது. இதை ஒரு சிறிய உதாரணத்தின்மூலம் விளங்கிக்கொள்ள முயல்வோம். இராக ஆலாபனை ஒன்றை நாம் சேட்கிறோம் என்று வைத்துக்கொள்வோம் அந்த ஆலாபனையில் ஏதேனும் கருத்து இருப்பதாக நமது புத்தி உணர்கிறதா? அல்லது அத்தகைய கருத்தையும் காண்கிறதா? காண்பதில்லை. ஆனாலும், இன்னதுதான் என்று சுட்டியறிய முடியாத ஓர்உணர்ச்சியை நாம் பெறுகின்றோம். எப்படி? இந்தச் சூட்சுமம் என்ன? இதனை உணர்ந்தாற்றான்இசையின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

இலக்கியத்தில், சொல்வானுக்கும் கேட்பானுக்கும்இடையில் கருத்தறிவு இடை நின்று இருவர்க்குமிடையேபிணிப்பை ஏற்படுத்துகின்றது. ஆனால் இசையைப் பொறுத்தவரையில் இசைப்பானுக்கும் கேட்பானுக்கும் இடையில் கருத்தறிவு கிடையாது. ஆகவே கருத்தறிவுப் பிணிப்பு ஏற்படுவதும் இல்லை; கருத்தறிவு உண்டென்று வைத்துக் கொண்டாலும், இசையில் வரும் சொற்கள் மிகமிகச் சொற்ப அளவுக்கே அந்தப் பணியைச்செய்கின்றன. ஆனாலும் இசைப்பானுக்கும் கேட்பானுக்கும் இடையில் பிணிப்பு ஏற்படுகின்றது என்பது என்னவோ உண்மை. எப்படி? இசையானது, சொற்கருத்து வழியிலே செல்லாமல் இசை வழியே சென்று பிணிப்பை ஏற்படுத்துகின்றது. கற்பனையோ சிந்தனையோ புத்தியோ தொட்டிராத உள்ளப் பரப்புக்களையும் உள்ளப் புலங்களையும், விபரிக்க முடியாதவ வகையிலே அருட்டுவதாலேயே இசைப்பானுக்கும் கேட்பானுக்கும் இடையில் உள்ளப் பிணிப்பு ஏற்படுகின்றது. எப்படி இசைஇப்படிஅருட்டுகிறது என்பதுதான் விஞ்ஞானம் செய்யவேண்டிய பணி. "மனிதன் தன்னுடைய ஆற்றல்முழுவதையும் சரியாகப் பயன்படுத்த இன்னமும் கற்றுக்கொள்ளவில்லை, மனிதவுள்ளத்தின் ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு கூறுதானும் மனிதனால் பயன்படுத்தப்படவில்லை" என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், ஆழ்நிலைத்தியானம் பற்றிக் கூறியதை இங்கே நினைவு கூர்வதுநல்லது. நம் உள்ளத்திலே இதுகால வரையும் தொட்டு அருட்டப்படாத மர்மச் சுவைத்தானங்கள் பல உள்ளன. இது விஞ்ஞானம் கூறுகின்ற உண்மை. கோடரிக்கு மசியாத வாழையைக் கையாலேயே கிழித்து விடமுடியும். ஒவ்வொன்றையும் அதற்கதற்குரிய முறையில் கையாண்டால்தான் பயன் பெறமுடியும். ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும், பாடுகிற மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும். சிற்பத்தால் அருட்டப்படும் சுவைத்தானங்கள் சில உள. அவ்வாறே மற்ற மற்ற கலைகளால் அருட்டப்படக் கூடிய சுவைத்தானங்களும் உள. மேற்கூறிய எவற்றாலும் அருட்டப்படமுடியாத சுவைத்தானங்கள் சிலஇசையைக் கேட்டதும் கட்டவிழ்ந்து, நெகிழ்ந்து மகிழ்ந்து, நம்முடைய உள்ளத்திலே உணர்ச்சி வண்ணங்களை வரைகின்றன. இந்த வண்ணங்கள்தாம் எம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. "பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா" என்று சொல்லவைக்கின்றன. நாதமானது இறைவனை அடைவதற்கான வழி என்று நம்முன்னோர்கள் கூறியதும் இதனாற்றான் போலும்! நல்லுணர்வுகளையும். மெல்லுணர்வுகளையும் வளர்த்து, உணர்வுநலனைப் பண் படுத்துவதன் மூலம்ஆழ்மனஎல்லையை பண் படுத்தி உலகத் தலைவனை உணரலாம், என்று அவர்கள் கருதியதும் இதனாலேதான். சமணமும் பவுத்தமும் தமிழ் நாட்டைப் பற்றிப் பிடித்திழுத்த காலத்தே தேவாரங்களும் பாவாரங்களும் பெருமளவில் தோன்றின. அவைசெய்த பணியை வேறெதுவும் செய்யவில்லை. இசையின் ஆற்றலே ஆற்றல்! இதுவரை, இசையின் நோக்கம் பற்றி ஒருவாறு பார்த்தோம். இனி, அடுத்த கட்டுரையில், இசையின் தன்மையைப்பற்றிச் சிந்திப்போம். (அ)

## ரூ.50ஆயிரம் பெறுமதியான உதிரிப்பாகங்கள் சிக்கின

யாழ்ப்பாணம், சனி

இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து வல்வெட்டித்துறையில் உள்ள வீடு ஒன்றில் திடீர் சோதனை நடத்திய காங்கேசன்துறைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் கருணாரத்ன தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சுமார் 50,000 ரூபா பெறுமதியான மோட்டார் இயந்திர உதிரிப்பாகங்களைக் கைப்பற்றியது.

இவை கடத்தல் பொருட்களாக இருக்கலாம் எனக் கருதப்பட்டு யாழ். சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம்தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. (பண். நி-உ)

## கல்விச் சுற்றுலா

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி முதலாம், இரண்டாம் வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ். மாவட்டத்திலுள்ள முக்கிய இடங்களை பார்வையிட்டனர். ஆசிரியர் கே, சின்னத்தம்பி தலைமையில் இச்சுற்றுலா நடைபெற்றது. [அ]

## ரூ. 2லட்சத்தில் பாலம்

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்தசாய்ந்தமருதுதோணாப் பாலம் சுமார் இரண்டுலட்சம் ரூபா செலவில் மிகவிரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை கல்முனை எம். பி. ஜனாப் எம். சி. அகமது மேற்கொண்டுள்ளார். (அ)

# தமிழ் இளைஞர் சிறையில் வாடக் காரணம் யார் என்பது உலகுக்குத் தெரியும்

## இராஜசிங்கத்திற்கு 'திருவாதவூரன்' பதில்

அன்புள்ள கே. ரி. ராஜசிங்கம் அவர்கட்கு:

'ஈழநாடு' பத்திரிகையின் தினசரி வாசகன் என்றமுறையிலே தாங்கள் திரு. சுந்தரலிங்கத்துக்கு எழுதிய இரு கடிதங்களையும் படிக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. உண்மையிலேயே தங்கள் கடிதங்களைப் படித்தபோது 'சுந்தர். காசி' நாடகத்தில் தாங்கள் 'கோமாளி', அதுவும் அர்த்தமற்ற 'கோமாளி'ப் பாத்திரத்தை வகிக்கிறீர்கள் என்ற உணர்வே எனக்குஏற்பட்டது. அதனால் தங்கள் 'பாத்திரப் படைப்பு'ப் பற்றி விமர்சிக்க விளைகின்றேன். தங்களதும் சுந்தரரதும் வாதப்பிரதிவாதங்களுக்கிடையில் 'தலையிடுதல் மனுதா'ராக நுழைவதற்கு என்னை அனுமதிப்பீர்கள் என்றே நம்புகின்றேன். ஏனென்றால் தாங்களும் காசி-சுந்தர் வழக்கிலே தலையிடுதல் மனுதாராக நுழைந்தவர்தானே.

இக்கடிதத்தை எழுதுவதன் மூலம் திரு. சுந்தரலிங்கத்துக்கு வக்காலத்து வாங்குவது எனது நோக்கமல்ல; அது தேவையுமில்லை. சுந்தரரது கருத்துக்களில் முழுக்கமுழுக்க எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், தனக்காக யாருமே வாதாடவேண்டிய அவசியமற்றவர் அவர். யாரையுமே எதிர்த்து வாதாடக்கூடிய ஆற்றலும், தார்மீக பலமும் அவருக்குண்டு. நான் இங்கு ஆராய விளைவதெல்லாம் அவருக்குள்ள அந்தத் தார்மீகபலம் அவரைஎதிர்த்து வாதாடுகின்ற தங்களுக்கும் உண்டா? என்பதுதான். இனி விடயத்துக்கு வருகின்றேன்.

தங்களது 10-3-77ந்திகதிய கடிதத்தில், தாங்கள் ஏழு வருடங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா (தமிழ் ஈழம் அல்ல) சுதந்திரக் கட்சியில் உறுப்பினராக இருப்பதையும், இன்று இந்த நாட்டிலே தமிழினம் இழிநிலையடைந்து இரண்டாம்தரப் பிரஜைகளாக (தாங்கள் உறுப்பினராகவுள்ள கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்புக்குப்பின்பும்) வாழ்ந்து வருகின்றதுஎன்பதனையும், சங்கிலி மன்னன் கைதுசெய்யப்படும்வரை இந்தநாட்டிலே தமிழருக்கென்று தனியான ராஜ்யம் இருந்திருக்கின்றது என்பதனையும் ஒப்புக்கொண்டிருக்கின்றீர்கள். நன்றி!

### வேறு வழியேயில்லை

1947-48 காலப்பகுதியில் ஏன் 'தமிழ்ஈழ'த்தை உருவாக்கத் தவறினீர்கள்? என சுந்தரரிடம் கேள்வி எழுப்பிஇருக்கிறீர்கள். அத்துடன் 14-3-77 திகதிய கடிதத்தில், 1947-1948 காலப்பகுதியில் தமிழ் ஈழத்தைப்பற்றி எண்ணாதது மாபெரும் தவறு என்று கூறி மக்கள் மன்றத்தில் இழுத்து குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். நான் உங்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம்; முப்பது வருடங்களுக்கு முன்பு நமது தலைவர்கள் சிந்திக்க மறந்துவிட்ட குற்றத்துக்கு அவர்களை மக்கள்முன் நிறுத்தும்போது, இன்று பெரும்பான்மையான தமிழர்கள் 'தமிழ்ஈழம்' பற்றிச் சிந்தித்து. அதைவிட இனி வேறு வழியேயில்லை என்ற முடிவுக்கு வந்தபின்பும் அவர்களோடு ஒத்துழைக்காது தமிழினத்தை அழித்து ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் சிங்களஏகாதிபத்தியத்துக்கு சாமரை வீசிக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு எப்போது? என்ன? தண்டனையைக் கொடுப்பது என்பதனைத்தான். அப்படி ஒருதண்டனையைத் தமிழினம் வழங்கும்போது அதனை ஏற்றுக்கொள்வதற்கு தாங்கள் தயாரா? என்று நான் கேட்கவில்லை-தயாராகிக் கொள்ளுங்கள் என்றுதான் ஆலோசனை கூறவிரும்புகின்றேன்.

மேலும் அமைச்சர் பதவி, பா. உ. பதவி போன்றன வழங்கிய 'சொகுசு' தமிழ்ஈழம் பற்றிய சிந்தனையை சுந்தருக்கு ஏற்படுத்தவில்லைஎனக் குற்றஞ்

**விவாதமேடை**

சாட்டியுள்ளீர்கள். ஆனால் தமிழ்மக்களிடையே 'தமிழ் ஈழம்' பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்ட இன்றைய காலகட்டத்திலேகூட வெறும் கூட்டுறவுச்சங்க இயக்குநர் பதவிகள் தருகின்ற'சொகுசே' உங்களைப்போன்ற 'இளைய தலைமுறை' (தங்களிடம் அந்த வார்த்தையைக் கடனெடுப்பதற்கு மன்னிக்கவும்) யினரை, தமிழ்ஈழம் கோரிக்கை வகுப்புவாதமெனக் கூறி அதற்கெதிராகச் செயற்படுவதுமன்றி, அக்கோரிக்கைக்காகப் போராடிய இளைஞர்களை காலவரையறையின்றிசிறையிலேவைத்து சித்திரவதைப்படுத்திய அரசுக்கு சாமரை வீசி, அதன் அமைச்சர்கள் வருகின்றபோது நிலப்பாவாடைவிரித்து, ஆராத்திஎடுத்து, குனிந்துகும்பிட்டு, வரவேற்கவைக்கவும் முடிகிறது என்றால் பாவம் அந்தப் பழைய தலைமுறை' என்ன செய்யும் 'தமிழ்ஈழம்' பற்றிச் சிந்திக்க மறந்துவிட்டதில் வியப்பேதுமில்லையே.

### வேறுபாடு உண்டு

அடுத்து காசி, மாவை, வண்ணை போன்ற 'உங்களையொத்தஇளைஞர்கள்' (தயவுசெய்து என்னையொத்த என்று நீங்கள் குறிப்பிட்ட வார்த்தைகளை வாபஸ்பெற்றுவிடுங்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் மன இயல்புகளில் நிரம்பவேறுபாடுஉண்டு. சிறைசென்று சித்திரைவதைப்பட்ட அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற தகுதி கூட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கு – உங்களுக்கு என்று நான் குப்றிபிடவில்லை-உண்டா? என்பதனை உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக் கேளுங்கள். அப்படிஒன்று உங்களிடம் இருக்குமானால்) சிறையிலே வாட சுந்தரர்தான் காரணமெனக் குற்றம் சுமத்தியுள்ளீர்கள். ஏன் இந்த விதண்டாவாதம்? இந்த இளைஞர்கள் சிறையில்வாட யார் காரணம் என்பது அகிலஉலகும் அறிந்ததே. சர்வதேச நிறுவனங்கள்; இந்த இளைஞர்களை ஒன்றில் நீதிமன்றத்தில்நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும்' எனக் கேட்டது நீங்கள் உறுப்பினராகவுள்ளதாகக்கூறும் சிங்கள அரசிடமே தவிர சுந்தரரிடமல்ல.

14-3-77ந் திகதிய கடிதத்தில் ஒற்றையாட்சிமுறையை ஆதரித்து தமிழ்மக்களை இன்றைய இழிநிலைக்குத் தள்ளுவதற்கு முதல்காரணமேசுந்தரர்தான் என்கிறீர்களே. எனக்கு ஒரு சந்தேகம்; தங்களையும் உறுப்பினராகக் கொண்டிருக்கும் பெருமைக்குரிய சுதந்திரக் கட்சிவகுத்துத்தந்த இன்றைய அரசியலமைப்பு எந்த ஆட்சிமுறையைக்கொண்டு அமைந்திருக்கிறது? தமிழரசுக்கட்சி அரசியல்நிர்ணய சபையிலே சமர்ப்பித்த சமஷ்டித்திருத்தப் பிரேரணைகூட யாருமே ஆதரிக்காத நிலையிலே தோற்கடிக்கப்பட்ட வரலாறு நிச்சயம் தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே நம்புகின்றேன்.

### களப்பலி!

தமிழன்சரித்திரத்தை முதற் களப்பலி கொடுத்ததுகூட சுந்தரர்தான் எனக்குறிப்பிட்டிருந்தீர்கள்அந்தக்'களப்பலி'என்ற வார்த்தையை என்னஅர்த்தத்தில் பாவித்தீர்களோ எனக்குத்தெரியவில்லை. ஆனால் களப்பலி என்றவுடன் என் கண்முன்னே வந்ததெல்லாம் வீரசிங்கம் மண்டப முன்றலிலே ஒன்பது அப்பாவித் தமிழ் உயிர்கள் துடிதுடிக்கப் பலியெடுக்கப்பட்டனவே – செம்மணியில் பரராசாவின் உடலினூடாகவும் துப்பாக்கி ரவைகள் துளைத்துச்செல்ல முடியுமா? என்று பரிசோதனை நடத்திப் பார்த்தார்களே-புத்தளத்திலே மதவழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு துப்பாக்கிமூலம் முடிவுகட்டப்பட்டதே – இவையெல்லாம்தான் நினைவுக்கு வந்தன. கூடவே இத்தனை கொடுமைகளைப் புரிந்தவர்களுக்கெதிராக நடவடிக்கை எதுவுமெடுக்காதுபதவி உயர்வுகள் கொடுத்துக் கௌரவித்த அரசிலேதான் தாங்களும் ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது நினைவுக்கு வரவே வயிற்றை 'என்னவோ' செய்தது.

தாங்கள் இன்று சுந்தரர்மீது சுமத்திய இந்த குற்றச்சாட்டுக்களை தமிழ்ஈழக் கோரிக்கைக்காக இன்று போராடிக்கொண்டிருக்கும் இளைஞர்கள் யாராவது கேட்டிருந்தால் அதில் நியாயமிருந்திருக்கும். அவர்களுக்கு அதற்கான தார்மீக உரிமையுமுண்டு. கேவலம் ஸ்ரீலங்கா (தமிழ்ஈழம்அல்ல)சுதந்திரக்கட்சியின் தமிழ்ஈழப் பகுதிஅமைப்பாளர்களில்ஒருவரான நீங்கள் குற்றம்சாட்டுகிறீர்களே; இது என்ன நியாயம்! சுந்தரரை - தமிழ்ஈழக் கோரிக்கையின் முதல் தீர்க்கதரிசியை-ஏன் தமிழ்ஈழத்தை அன்று கோரவில்லை அதனால்தான் இன்று இவ்வளவு இன்னல்களும் என்று குற்றஞ்சாட்ட, கொள்கையளவில் தானும் தமிழ்ஈழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத உங்களுக்கு என்ன உரிமையுண்டு? என்பதுதான் எனக்குப்புரியவில்லை.

### பதில் கூறுங்கள்

இறுதியாகத் தங்களிடமிருந்து நான் பகிரங்கமாக அறிய விரும்புவதெல்லாம்;

1. 14-3-77 கடிதத்தில் ஒற்றையாட்சி மூலம்தான் தமிழ் மக்கள் இன்றைய இழிநிலையை அடைந்ததாகக் கூறும் தாங்கள் இன்றும் அதே ஒற்றையாட்சி அமைப்புக் கொள்கையுடைய கட்சியில் இருப்பது ஏன்?

2. 1947, 48ல் 'தமிழ்ஈழம்' கோராதது அவர்களது தவறு எனக்கூறும் தாங்கள் 1977 ஆவது 'தமிழ் ஈழம்' கோரும் இயக்கங்களை ஆதரிக்காது 'பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லை' எனக் கூறும் அரசியல் கட்சிக்கு தமிழ்ஈழப்பகுதியிலே அமைப்பாளராக இருப்பது ஏன்?

3. இன்று இந்த நாட்டிலே தமிழினம் இழிநிலையடைந்து இரண்டாம்தரப் பிரசைகளாக வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள தாங்கள்; இழிநிலை அடையக் காரணமாக புதிய அரசியல் அமைப்பையும் அதனை ஆக்கித்தந்த அரசியல்கட்சியையும் ஆதரிப்பதும் அதற்காக இழிநிலையடைந்துள்ள தமிழினத்துடன் ஆதரவு திரட்டுவதும் எதற்காக?

4. 14-3-77 கடிதத்தில் இளையதலைமுறையின்பிரதிநிதி என உங்களை வர்ணித்திருக்கிறீர்களே; இன்றைய இளைய தலைமுறையினரில் 99 வீதமானோர் 'தமிழ் ஈழத்தையே தங்கள் முழுமூச்சாகக் கொண்டிருக்கின்றனர் என்பதனை ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியாயின் 'தமிழ் ஈழம்' கோரிக்கைபற்றி வாயே திறக்காத தாங்கள் எப்படி இளைய தலைமுறையினரின் பிரதிநிதியாக முடியும்? என்றகேள்விகளுக்கானபதில்களைத்தான் தேர்தல் காற்று வேகமாக வீசுகின்ற இன்றைய காலகட்டத்திலே 'தமிழ் ஈழ'க் கோரிக்கையின் முன்னணிப் போராட்டவீரராகத் தாங்கள் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனென்றால் ஏழு வருடங்களுக்கு முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது அதன் உறுப்பினராகச் சேர்ந்தீர்கள். இன்று ஆட்சி அஸ்தமிக்கும்போது...? தங்களைப்போன்றவர்கள் இன்னொரு பாதையை தேர்ந்தெடுப்பதிலே ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

'இன்றைய காலத்தில் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி அறிவு கூடியவர்கள். அவர்களை ஏமாற்றமுடியாது' என்று தாங்கள் சுந்தரருக்கு எழுதிய அதே வரிகளைத் தங்களுக்கு நினைவூட்டி இம்மடலை முடிக்கிறேன்.

---

## பெண்ணை வெட்டியவழக்கில் எதிரி குற்றவாளி

பண்டத்தரிப்பு, வெள்ளி

கத்தி வெட்டு, போத்தல் தாக்குதல் வழக்கு ஒன்றில் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

தமது தோட்டக் காணிக்குச் சென்றுகொண்டிருந்த இளம் பெண் ஒருவரை வழிமறித்து புல்லுச்சத்தகத்தினால் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாகவும் அவரது தாய்க்கும் காயம் விளைவித்ததாகவும் சில்லாலை தெற்கைச் சேர்ந்த கே. பொன்னுத்துரை என்பவருக்கு எதிராக சங்கானைப் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சங்கானை சுற்று நீதிமன்றத்தில் நீதவான் திரு. எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கந்தசாமி இரத்தினேஸ்வரி என்னும் மேற்படி இளம் பெண் தமது தோட்டக் காணிக்கு கையில் ஒரு புல்லுச் சத்தகத்துடன் சென்றுகொண்டிருக்கையில் அதே இடத்தைச் சேர்ந்த கதிரேசு பொன்னுத்துரை என்பவர் அவரை வழிமறித்து அவரது கையிலிருந்த புல்லுச்சத்தகத்தைப் பறித்து வெட்டினாரென்றும் அச்சத்தம் கேட்டு ஓடிவந்த இரத்தினேஸ்வரியின் தாயார் இ. வள்ளியம்மை என்பவரைப் போத்தல் ஒன்றினால் அடித்து காயப்படுத்தியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம்பற்றி முன்னர் விசாரணை நடத்திய சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. எல். ஏ. குணரத்தினவும் சாட்சியமளித்தார். எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் ஏப்ரல் மாதம் 6-ம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு, எதிரியின் கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டார். அன்று தண்டனை வழங்கப்படும். (உ)

## எதிரி விடுதலை

மட்டுவில், வெள்ளி

காரைநகர் இரும்புக்கம்பித் தாக்குதல் வழக்கில் ஊர்காவற்றுறை நீதவான் திரு. வி. ஜெகசோதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காரைநகரைச் சேர்ந்த பி. பத்மநாதன் என்பவரை அதேயிடத்தைச் சேர்ந்த கே. துரைராஜசிங்கம் என்பவர் இரும்புக்கம்பியால் தாக்கிக்காயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டி இவ்வழக்கு ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்தது.

எதிர்தரப்பில் சட்டத்தரணி திரு வி.என். நவரத்தினம் சட்டத்தரணி திரு. எம். ஸ்ரீகாந்தாவின் உதவியுடன் ஆஜரானார்.

பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் வழக்கை நடத்தினர். (உ)

## பிரமோற்சவம்

திருகோணமலை, வெள்ளி

திருக்கோணேஸ்வர ஆலய பிரமோற்சவம் அடுத்தமாதம் 3ம் திகதி துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

## நெடுந்தீவு விநாயகர் பெருவிழா

யாழ்ப்பாணம், சனி

நெடுந்தீவு மேற்கு, நெழுவினி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய திருக்குடத் திருமுழுக்குப் பெருவிழா ஏப்ரல்மாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஏப்ரல் 5-ம் திகதி தொடக்கம் தொடர்ந்து 45 நாட்கள் லட்சார்ச்சனையும், தொடர்ந்து 10 நாட்களுக்கு அலங்கார உற்சவமும் இடம்பெறும்.

மார்ச்மாதம் 18-ம் திகதி மகாகும்பாபிஷேகத்துடன் இவைநிறைவுபெறும்.

விசேட நிகழ்ச்சிகளாக திருமுறைஓதல், இசைக்கச்சேரி, மேளக்கச்சேரி, கதாப்பிரசங்கம் என்பனவும் இடம்பெறும்.

கும்பாபிஷேக தினத்தன்று காலை குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து விசேட படகுச்சேவையும் துறைமுகத்திலிருந்து பஸ்சேவை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (உ)

## பாராட்டு

ஊர்காவற்றுறை, வெள்ளி

கடந்த நான்கு ஆண்டுகளாக ஊர்காவற்றுறை தபாலகத்தில் தபாலதிபராகக் கடமையாற்றி காரைநகர் தபால் நிலையத்துக்குப் பொறுப்பதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற திரு. எ. எஸ். பரம்சோதியின் சேவையைப் பாராட்டி ஊர்காவற்றுறைத் தபால் நிலையப் பொறுப்பதிகாரி எவ். பொன்னையா தலைமையில் உபசார விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பொறுப்பதிகாரி திரு. பொன்னையா பேசுகையில் திரு. பரம்சோதியிடம் நேர்மையையும் கடமையுணர்ச்சியையும் தாம் கண்டுகொள்ள முடிந்தமையையிட்டுப் பெருமைப்படுவதுடன், தபால் சேவையின் முக்கிய குறிக்கோளுக்கு இலட்சணமாக விளங்கினாரென்றும் குறிப்பிட்டார்.

மற்றும் உதவித் தபாலதிபர்கள் எட்வேட் அருள்நாயகம் நமசிவாயம் குலசிங்கம் ஆகியோரும், சிற்றூழியர் சார்பில் திரு. சேவியரும் பேசினர்.

# "தனிநாடுபற்றிச் சிந்திக்க வைத்தவர் செல்வாவே"

— மாவை. சேனாதிராஜா

மாவிட்டபுரம், வெள்ளி

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பல்வேறு வழிகளில் இயக்கம் நடத்தி அந்த இயக்கம் வலுவான, ஸ்திரமானதோர் இயக்கமாக மாறியுள்ள இச் சந்தர்ப்பத்திலே தனிநாடு பற்றி எம்மை சிந்திக்க வைத்துள்ளார் தந்தை செல்வநாயகம். தனிநாடு என்பது வெறும் உணர்ச்சியளவில் மட்டும் இருந்துவிடக் கூடாது. நாம்வாழவேண்டுமானால். எமதுமொழி, கலை, கலாச்சாரம் பாதுகாக்கப் படவேண்டுமானால் தனிநாடு அமைப்பதுதான் ஒரேவழியாகும்."

இவ்வாறு விமன்காமம் காந்தி சமூகசேவா நிலைய முன்றலில் இடம் பெற்ற கருத்தரங்கில் பேசுகையில் மாவை. சேனாதிராசா கூறினார்.

இளைப்பாறியஆசிரியர் திரு. இராமலிங்கம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"நாம் விரும்பும் தனிநாடு என்பது ஆட்சிமன்றஜனநாயக முறையினாலோ அல்லது அகிம்சை முறையினாலோ பெறக்கூடிய ஒன்று என்பதில் நாம் நம்பிக்கை இழந்துவிட்டோம். உலகநாடுகளில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களைப் போன்றதோர் போராட்டமே தனிநாடு அமைக்க வழிஅமைக்கும் என்றே நாம் நம்புகின்றோம். நாம் சிறுதொகையினர் என்பதால் எவரும் எம்மை அடக்கிவிடமுடியாது. அல்ஜீரிய விடுதலைப் போரில் 100 போர்வீரர்கள் மட்டுமே ஈடுபட்டு வெற்றி கண்டனர். இதுபோன்று நம்மிடையேயும் பல வீரர்கள் தோன்றவேண்டும்.

"நம்மை நாமே வீணாக அழித்துக்கொள்வது எமது நோக்கமல்ல. அதனால்தான் சிறை, உண்ணாவிரதத்தையும் தந்தையின் கோரிக்கைப்படி இடையில் நிறுத்தினோம். வீதியால் போகும்போது காரிலோ சைக்கிளிலோ மோதி அதனால் போகின்ற உயிரை தமிழ் மொழிக்காக- தமிழ் மண்ணுக்காக நாம் அர்ப்பணிக்கத்தயாராகவுள்ளோம். இந்தியாவிலே பலர் மொழிக்காக தீமூட்டிச் செத்தனர். வியட்நாமில் பௌத்தபிக்கு ஒருவர், அங்கு தமது மதத்துக்கு இடமில்லையெனக்கூறி தீமூட்டிச்செத்தார். ஆகவே நாமும் தமிழ் ஈழத்திற்காக எம்மை அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும்.

"நாம் இந்கநாட்டில் ஒரு காலத்தில் ஆட்சி செலுத்தியுள்ளோம். அத்துடன் மொழி, பிரதேசம், கலை, கலாச்சாரம், பொருளாதாரவளம் என்பன கொண்ட தேசிய இனமாக இருக்கின்றோம். நாம் வாழ வேண்டும். நமது மொழி, கலை, கலாச்சாரம் வாழவேண்டும். இதற்குத் தனிநாடுதவிர வேறு வழிஇல்லை" என்றார்.

மற்றும் பலர் பேசினர்.

(அ)

## விளையாட்டுப் போட்டிகள்

நீர்வேலி, சனி

வலி. கிழக்கு ஆசிரியர் சங்க வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும் இப் போட்டி தொடர்ந்து இன்றும்நிகழும்.

### மெய்வல்லுனர் போட்டி

வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிவிளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

### இறுதி ஆட்டம்

உரும்பராய் புனிதமிக்கேல் சனசமூக நிலையத்தின் 6–வது ஆண்டு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது,

இறுதி ஆட்டத்தில் உரும்பராய் அண்ணா விளையாட்டுக் கழகமும் கொக்குவில் நேதாஜி விளையாட்டுக்கழகமும் மோத இருக்கின்றன. (அ)



## அரங்கேற்றம்

செல்வி துரைராஜசிங்கம் (ஜீன்) பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இராமநாதன் கல்லூரி மாணவியான இவர் மாவிப்பாய் செல்வி விஜேதினி அரசரத்தினத்தின் மாணவியும், யாழ். தபாற்கந்தோரில் கடமையாற்றும் திருமதி துரைராஜசிங்கம் நாகேஸ்வரியின் ஏகபுதல்வியும் ஆவார். (ஆனை. நிருபர்)

# "பழைய தலைமுறையினரின் சேவைகளை நினைவுகூர வேண்டும்"

## திருமலையில் இராசதுரை எம். பி.

திருகோணமலை, வெள்ளி

"இளைய தலைமுறையினர் பழைய தலைமுறையினர்செய்த சேவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்"

திருகோணமலை சிவன் கோவில் வீதியில், சிறை சென்று மீண்ட திரு. சே. சிறீஸ்கந்தராசாவிற்கு வரவேற்பளிக்குமுகமாக நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் மட்டுநகர் முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருமலை எம். பி. திரு. பா. நேமிநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டம் திருமலை சிவன்கோவிலடிதமிழ் இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது,

திரு. இராசதுரை தொடர்ந்து சொன்னதாவது", ஒரு இயக்கத்திற்குக் கட்டுப்பட்டபின் தானைத்தலைவனின் கட்டளைப்படியே நான் நடக்க வேண்டும். அப்படித்தான் நாம் நடக்கின்றோம். தந்தை செல்வாவின் கட்டளைப்படி. நாம் இயங்கிவந்துள்ளோம். ஒரு இயக்கத்திற்கு ஒருவன் தான் தலைவனாக இருக்கமுடியும். எல்லாரும் தலைவனாகிவிட்டால் நாம் வெற்றிக்கம்பத்தை எவ்வாறு அடைவது? இளையதலைமுறையினர் பழைய தலைமுறையினர் செய்த சேவைகளை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாற்பது வயதுக்கு மேல் தான் மனிதன் முதிர்ச்சி அடைகின்றான். அப்பொழுதுதான் அவனால் நாட்டுக்கும் அவனின் இனத்திற்கும் முழுமையான சேவை செய்ய முடிகின்றது. இதை இன்றைய இளஞ் சந்ததியினர் உணர்ந்து இயங்க வேண்டும்".

திரு ஞானகணேஷ், முகிலமுகன், ஜெயசிங்கம், இராசரத்தினம் உட்படப் பலர் பேசினர். (உ)

# "ஹயாத்து நபிக்குடியை தனி வட்டாரமாக்குக"

சாய்ந்தமருது, வெள்ளி

சம்மாந்துறை கிராமசபைப் பகுதியில் உள்ள ஹயாத்து நபிகுடிக்கிராமத்தைத் தனிவட்டாரமாகப் பிரித்துத் தருமாறு கோரும்தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற சம்மாந்துறை ஹயாத்துநபிகுடி சுதந்திரக் கட்சிக் கிளையின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்வரும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

ஹயாத்துநபிகுடி கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கு மேலதிகப் புதிய கட்டடங்களும், ஆசிரியர்கள் விடுதியும் அமைக்கப்பட வேண்டும். சம்மாந்துறையிலிருந்து நெயினாகாடு வரையும் புதிய பஸ்சேவை ஒன்றுஆரம்பித்தல், ஹயாத்து பிகுடி கிராமத்தில் தற்போது தற்காலிகமாகவுள்ள கூட்டுறவுச் சங்கக்கிளையை நிரந்தரக் கிளையாக அமைத்தல்; நெயினாகாட்டிலிருந்து விண்ணாங்கடிப் பாம் மல்லிகைத்திவு ஊடாக மல்வத்தை சந்திவரைக்கும் உள்ள வீதிகளுக்கு கல்போட்டுத் தார் ஊற்றிச் செப்பனிடல் ஹயாத்துநபிகுடி கிராமத்திலுள்ளபாடசாலைகளுக்கு சிங்களஉதவி-ஆசிரியர்களை நியமித்தல்: பிரதேச அபிவிருத்திச் சபையின்கீழ் இப்பகுதியில் கருப்பட்டித் தொழிற்சாலை செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்; மல்கம்பிட்டியிலுள்ள உபதபால் நிலையத்தை ஹயாத்துநபிகுடி கிராமத்துக்கு இடமாற்றம் செய்தல்.

இத்தீர்மானத்தின் பிரதிகள் சம்மாந்துறை சுதந்திரக்கட்சிப் பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி ஜனாப் யு. எல். எம். மொகிதீன அம்பாறைமாவட்ட அரசியல் அதிகாரியும் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைப்பு பிரதி அமைச்சருமான திரு. சோமரத்ன செனரத் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# "கூட்டுறவுப் புனிதத்தைக் காக்கும் பங்கு எல்லாருக்குமுண்டு"

சங்கானை, வெள்ளி

"கூட்டுறவுத்துறை ஒரு புனிதமானது. இதனைப் பேணி வளர்க்கும் பொறுப்பு ஊழியர்கள் மட்டுமல்ல, கூடிய பங்கு பொதுமக்களுக்கே உண்டு என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்த உணர்ச்சி எம்மவர்களிடையே குன்றியதனால்தான் நமக்கு ஓர் இக்கட்டான நிலை உருவானது என்பதை உணரமுடியும்."

சங்கானை ப. நோ. கூ. சங்க புதிய நெறியாளர் குழுத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எம். கே. சுப்பிரமணியம், சங்க முன்றலில் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சுப்பிரமணியம் தொடர்ந்துபேசுகையில்:"கடந்த ஒருமாத காலமாக இப்பகுதி மக்கள் தமக்கான பங்கீட்டு உணவுப் பொருட்களை பெறுவதில் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். இந்தச்சந்தர்ப்பத்தில் நான் இப்பதவிக்கு வருவேன் என எண்ணவும் இல்லை. என்னைத் தெரிவுசெய்தமையையும் சில நண்பர்கள் வாயிலாக அறிந்து முதல் தயங்கினேன். ஆனால் பலரின் வேண்டுகோள்களும் உற்சாகமும் ஒருபுறம் இருக்க ஏழைகள் பட்ட கஷ்டங்களையும் நேரில் கண்ட காட்சிகளும் என்னை இப்பணிக்கு உந்தித்தள்ளியது.

"பொதுமக்களினதும் ஊழியர்களினதும் ஒத்துழைப்பு என்றும் எமக்கிருந்தால் இங்கு நிலவிவரும் ஊழியர் பிரச்னைகள் மற்றும் ஆகியன மிகவிரைவில் தீர்த்துவைக்க ஏதுவாகும் "கூட்டுறவே நாட்டு உயர்வு" என்பதனை உணர்ந்து ஊழியர்கள் சேவை மனப்பான்மையை முதலிலும் ஊதியத்தை இரண்டாவதாகவும் கணித்து ஒத்துழைப்பை நல்கவேண்டும். அப்போதுதான் சங்கம் வளர்ச்சி பெற்று ஊழியரும் நலன் அடைந்து, பொதுமக்களும் நாடும் பயன்பெற வழிபிறக்கும். ஊக்கமுடையார் ஆக்கமடைவார் என்பதையும் நாம் நினைவில்வைத்தல் வேண்டும். நல்லதைச் செய்யும் எமக்கு இறை அருள் என்றும் கிட்டும்" என்றார்.

நெறியாளர் குழு உறுப்பினர் திரு. பொ. சிவகுரு, பொதுச்சபைத் தலைவர் திரு. சி. குலசூரியன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

(உ)

• • •

## செல்வாவின் நலம்வேண்டி பிரார்த்தனை

யாழ்ப்பாணம், சனி

தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பூரணசுகம் பெறவேண்டும் எனப் பிரார்த்தித்து, இன்று, நாளை, நாளை மறுதினம் ஆகிய மூன்று தினங்களிலும் திருநெல்வேலி புனித சவேரியார்ஆலயத்தில் பூசைப் பலியும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறவிருக்கின்றன.

(உ)

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மருதானையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 608–வது இலக்க சுவீப் சீட்டிழுப்பில் முதல் 3 பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:—

1-வது பரிசு
**26 N 0361**
**1 லட்சம்**

2–வது பரிசு
**17 X 0833**
**40 ஆயிரம்**

3–வது பரிசு
**03 C 0204**
**10 ஆயிரம்**

தலா 1,500 ரூபா ஆறுதல் பரிசு பெறும் டிக்கெட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 15 A 0770 | 27 A 0620 |
| 41 A 0620 | 43 B 0360 |
| 43 B 0507 | 44 B 0220 |
| 37 C 0692 | 45 C 0330 |
| 58 C 0360 | 30 D 0942 |
| 50 D 0943 | 57 D 0673 |
| 03 E 0548 | 42 E 0995 |
| 59 E 0036 | 04 F 0715 |
| 08 F 0141 | 27 F 0843 |
| 36 G 0666 | 42 G 0982 |
| 47 G 0862 | 56 G 0797 |
| 23 H 0457 | 33 H 0035 |
| 40 H 0005 | 51 H 0617 |
| 60 H 0709 | 35 J 0397 |
| 36 J 0517 | 59 J 0636 |
| 49 K 0520 | 52 K 0067 |
| 56 K 0251 | 11 L 0823 |
| 25 L 0371 | 40 L 0456 |
| 48 L 0426 | 12 M 0439 |
| 18 M 0720 | 19 M 0987 |
| 20 M 0574 | 21 M 0366 |
| 29 M 0859 | 31 M 0738 |
| 47 M 0826 | 50 M 0849 |
| 17 N 0807 | 47 N 0082 |
| 57 N 0231 | 01 O 0100 |
| 04 O 0045 | 17 O 0153 |
| 10 O 0450 | 53 O 0200 |
| 04 P 0393 | 09 P 0970 |
| 25 P 0130 | 34 P 0041 |
| 34 P 0969 | 45 P 0609 |
| 31 Q 0138 | 47 Q 0005 |
| 05 R 0709 | 41 S 0254 |
| 50 S 0641 | 22 T 0718 |
| 55 T 0114 | 58 T 0911 |
| 20 U 0117 | 28 U 0474 |
| 28 U 0456 | 44 U 0097 |
| 50 U 0697 | 56 U 0397 |
| 08 V 0300 | 10 V 0815 |
| 11 V 0668 | 42 V 0651 |
| 44 V 0826 | 47 V 0385 |
| 57 V 0563 | 02 W 0579 |
| 27 W 0982 | 49 W 0462 |
| 49 W 0549 | 57 W 0868 |
| 11 X 0680 | 35 X 0980 |
| 53 X 0773 | 58 X 0253 |
| 03 Y 0631 | 24 Y 0301 |
| 31 Y 0830 | 51 Y 0635 |
| 25 Z 0926 | 30 Z 0061 |
| 30 Z 0569 | 35 Z 0546 |
| 39 Z 0375 | 48 Z 0139 |

**ராஜா** [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி தங்கவேலு நடித்த
**இருவர் உள்ளம்** (புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஃ சிவாஜி (இருவேடம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன் நடித்த
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** இப்பொழுது நடைபெறுகிறது
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
ஃ ஸ்ரீகாந்த் ஃ மனேரமா
நடித்த
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**லிடோ** போன்: 7693 சிவாஜி — தேவிகா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**அன்புக் கரங்கள்**
(புதிய பிரதி)

8-வது வெற்றி வாரம்!
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
கடைசி 2 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
**அபூர்வ ராகங்கள்**

28-3-77 திங்கள் முதல்
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
நடித்த
**வீரத் திருமகன்**

**REGAL** (JAFFNA)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
CHRISTOPHER LEE in
**Scars of Dracula**
(Color)

**ராணி** [யாழ்நகர்]
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நல்ல நேரம்**
(புத்தம் புதிய பிரதி)

**றியோ** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
அலெக்சாண்டர் டியூமாஸின் பிரபல்யமிக்க நாவல்
இப்பொழுது
எப்போதும் தயாரிக்கப்படாத அளவுக்குப்
பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள படம்
**THE COUNT OF MONTE-CRISTO**
சூழ்ச்சியாலும் சதியாலும்
காட்டிக்கொடுக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டு
உயிரோடு அடைக்கப்பட்டிருந்த
நிரபராதி ஒருவனின் கதை.
ஆனல் அவன் இறந்துவிட்டதாக உலகத்துக்கு
அறிவிக்கப்பட்டது.
டாண்டே சாதாரண மனிதன் அல்ல!
பழிக்குப் பழிவாங்க அவனுக்கு 23 ஆண்டுகள்
பிடித்தன. பழிக்குப்-பழிவாங்கியே தீருகிறுன்.
வரலாறிலேயே திரம் மிக்க செயல்.

பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ பிற்பகல்
1-30 காட்சி
(முன்னேற்பாடு செய்தல்வேண்டும்)
எல்லா வகுப்புகளுக்கும் ஒரே கட்டணமாக ரூ. 1-50
முகாமையாளருடன் தொடர்புகொள்க.
(ஒருசில நாட்களுக்கு மட்டும்)




# தவக்கால நற்சிந்தனை

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுவீகரித்துக்கொள்வார்கள்.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.

நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

(மத்தேயு 5. 3:11)

புவிவாழும் மனிதர்கள் எல்லோரும் பாவிகளா? அப்படி யார் சொன்னுர்? பாவிகள் என்ற பட்டம் அவர்கள் நெற்றிகளில் சூட்டப்பட்டுள்ளனவா? அப்படியும் இல்லை. பாவிகளுக்கென்று தனியான வீடும், நீரும், நெருப்பும், உணவும் என எவையேனும்தனியே ஒதுக்கப் பட்டிருக்கின்றனவா? அப்படியும் இல்லையே. பிறகு எப்படித்தான் பாவிகள் என்று கண்டுபிடிப்பது.

சிலபழங்கள் மரத்திலேயே பழுத்துப் பறிக்கப்படுகின்றன. பல பழங்கள் பக்குவ நிலையில் உள்ளபோது பறிக்கப்பட்டு பழுக்கவைக்கப்படுகின்றன. பாவமும் அப்படித்தான். புண்ணியம் போல் தோன்றும் பாவங்களும், பாவங்களைப் போல் தோன்றும் புண்ணியங்களும் உண்டு.

இப்போது சொல்லுங்கள் யார் பாவிகள்?

—ஞானஒளி

## ஒற்றுமையை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மோதாது கூட்டணித் தலைமைப்பீடம் யாரை வேட்பாளராகப் போடுகின்றதோ அவருக்கு ஆதரவளிக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

(உ)


**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினரிசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-உஷாநந்தினி
**ராஜபார்ட் ரங்கதுரை**

**வெஸ்லி** [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
**எங்க பாட்டன சொத்து**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி - பத்மினி
**தேனும் பாலும்**


## இ.போ.ச.பஸ் களவு

கொழும்பு,வெள்ளி

முகத்துவாரத்தில் கடந்த வாரம் காணுமல் போன இ.போ.ச. பஸ்வண்டியொன்று கறுவாக்காட்டில் கைவிடப்பட்டிருக்கக்கண்டுபிடிக்கப் பட்டது.

பஸ்ஸில் இருந்த மோட்டர் போன்ற பல உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டிருக்கின்றன. இதுதொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


## யாழ்ப்பாண மாநகரசபை

### நரிக்குண்டுவீடமைப்புத் திட்டத்தில் கிணறு ஒன்று அமைப்பதற்கான

# கேள்வி அறிவித்தல்

யாழ். மாநகரசபையுடனே அல்லது அரச பொது வேலைப் பகுதியுடனே ரூபா. 20,000/-ற்கு மேல் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறிய வேலைக்கான கேள்விகள் என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரர் ஒவ்வொருவரும் மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா. 25/-ம், படிவக் கட்டணமாக ரூபா. 5/-ம், 04-04-77 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்தி மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 06-04-77 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாக அனுப்பலாம் அல்லது எனது அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 06-04-77 ஆம் திகதி பி. ப. 3-30 மணிக்கு அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

4. கேள்வி நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
24-3-77. 5789

# ஏல விற்பனை

வெற்றுச் சீமெந்துப்பைகள், தார்ப்பீப்பாக்கள், போத்தல்கள், எண்ணைப் பீப்பாக்கள், பழைய மண்வெட்டிகள், பிக்கான்கள், கதிரைகள், சுவர்க் கடிகாரம், சைக்கிள் உட்பட வேறு பல பொருட்களும் 30-3-77 ம் திகதி காலை 9-00 மணிக்கு மாநகரசபை பொதுக் களஞ்சியத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்தி பெற்ற கேள்விக்காரர்கள் பொருட்களின் கேள்வித் தொகையை உடன் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

க. சிவஞானம்,
மாநகரசபை
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பொதுக் களஞ்சியம்,
மாநகரசபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1977-03-24,
5791


## அழுது—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பிலிருந்து பல கூட்டணி ஆதரவாளர்கள் வந்திருந்தனர். இவர்கள் அங்குள்ள பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டனர். ஆதரவாளர்களில் பெரும்பா[illegible]னோர் இளைஞர்களாகவேகா[illegible]ப்பட்டனர்.

வவனியா எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு மற்றும் வவனியா இளைஞா பேரவைஉறுப்பினர்களும்ஆஸ்பத்திரிக்கு நேற்று வந்திருந்தனர்.

### சுயாட்சி நவரத்தினம் வி. பி. யும்

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து மூதறிஞர் செல்வாவின் உடல்நிலை பற்றி அறிந்து கொண்டார். அவருடன் சுயாட்சிக்கழக ஆதரவாளர்களும் வந்திருந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் நேற்றுக்காலை வந்து,மூதறிஞர் செல்வநாயகத்தின் உடல்நிலை பற்றி அறிந்துசென்ருர். யாழ்ப்பாணம் எம் பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டினும் வந்திருந்தார்.

பதிவுப்புத்தகத்தில்நேற்று நண்பகல்வரை 737 பேர் கையெழுத்திட்டிருந்தனர். மக்கள் தொடர்ந்தும் கையெழுத்திட்டுவருகின்றனர்.

நேற்று நண்பகல் தமிழ் மகளிர் பேரவையினர் வந்து தந்தை செல்வாவின் நிலைமை பற்றிக் கேட்டறிந்தனர். அவர்கள் கண்கள் கலங்கிக்காணப் பட்டன.

### இளைஞர்கள் அழுதனர்

இளைஞர் பேரவையைச் சேர்ந்த சில துடிப்புள்ள வாலிபர்கள் தனியாகஇருந்துஅழுது கொண்டிருந்தனர்.

கூட்டணிப் பிரமுகர்கள் அவர்களுக்குத் தேறுதல்கூறிய போதிலும் இளைஞர்கள் அவர்களின் பேச்சில் நம்பிக்கை வைக்காமல் அழுதுகொண்டிருந்தனர்.

### அழுது மயங்கிய மூதாட்டி

அங்கு வந்திருந்த ஒரு வயோதிப மாது, 'ஐயாவைக் காப்பாற்றுங்கள்' என்று கைகூப்பியபடி அழுதுகொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் அழுதழுது மயக்கமடைந்து விட்டார். அங்கு நின்ற பெண்கள் அவருக்கு முதலுதவி அளித்தனர்.

நேற்று நண்பகல் மாவை சேனதிராசா, திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும் வந்திருந்தனர்.

16-ம் வார்ட்டிலுள்ள முதலாவது அறைக்குள் உள்ள குளிரூட்டப்பட்ட அறைக்குள்ளேயே மூதறிஞர் மயக்கமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறுர்.

திருமதி செல்வநாயகம், பக்கத்திலுள்ள சிறிய அறையில் தொடர்ந்து இருந்துவருகிறுர்.

தந்தை செல்வாவின் புதல்வரான திரு. சந்திரகாசன் எந்நேரமும் அங்கேயே இருந்து நிலைமையைக் கவனித்துவருகின்ருர்.

சில இளைஞர்கள், கடந்த மூன்று நாட்களாக வீட்டுக்குக்கூடச் செல்லாமல் ஆஸ்பத்திரியிலேயே தங்கியிருந்து, நிலைமையை அவதானித்துவருகிருர்கள். (க-அ)

## யாருடையவை?

யாழ்ப்பாணம்,வெள்ளி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை கந்தசாமி என்பவரால் பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட மூன்று அடையாள அட்டைகள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

ஈழநாடு
The EELANADU

## காசி ஆனந்தன் சுகவீனம்

யாழ்ப்பாணம், சனி

வடக்கில் சூருவளி பிரசாரம் செய்துவந்த கவிஞர் காசி ஆனந்தன் கடும் காய்ச்சலினுல் பீடிக்கப்பட்டுப் படுக்கையிலிருந்தபடியே சிகிச்சைபெற்று வருகிறுர்.

கடந்த புதன்கிழமை தீவுப் பகுதிகளில் நடந்த எழுச்சிக் கூட்டங்களே அவர் இறுதியாகிக் கலந்துகொண்ட நிகழ்ச்சியாகும்.

தற்சமயம் கூட்டணிப்பிரமுகர் ஒருவரின் இல்லத்தில் தங்கியிருந்து கவிஞர் சிகிச்சை பெற்றுவருகிறுர். (க-அ)

### சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், சனி

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் சிகிச்சைக்குப்பின் குணமடைந்துவருகிறுர்.

கடும் சுகவீனம் காரணமாக கொழும்புஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் படுக்கையில் இருந்தபடியே சிகிச்சை பெற்ருர். அவரைப் பார்ப்பதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

தற்போது அவர் எழுந்து கதிரையில் இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறுர்.

### சங்கரப்பிள்ளை

கொழும்பில் சிகிச்சைபெற்றபின் நேற்றுமுன்தினம், யாழ்ப்பாணம்வந்த தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகச்செயலாளர் திரு. சங்கரப்பிள்ளை, அவரது இல்லத்தில் பூரண ஓய்வு எடுத்துவருகிறுர். (க-அ)

## ஜெகஜீவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது இப்படி இருக்க முன்னைய நிதியமைச்சின் அதிகாரிகளுடன் புதிய பிரதமர் இன்று ஆலோசனை நடத்தினுர்.

முன்னராக பிரதமர் மொரார்ஜிதேசாய் திரு.ஜெகஜீவன்ராமின் இல்லத்துக்குச் சென்று ஜெகஜீவன்ராமுடன் பேசினுர்.

### ஜெயப்பிரகாஷ் ஆஸ்பத்திரியில்

ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்று திடீர் சுகயீனமுற்று பம்பாய் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார். புதுடில்லியிலிருந்து பட்ஞ சென்றிருந்த அவர், பட்ஞவில் சுகயீனமடைந்ததைத் தொடர்ந்து இராணுவவிமானப்படைவிமானத்தில் பம்பாய் கொண்டு செல்லப்பட்டார். நிலைமை திருப்தியாக இருப்பதாகவைத்திய அறிக்கை கூறுகிறது.

### சுவரன்சிங் சுகயீனம்

முன்னுள் வெளிநாட்டமைச்சர் திரு.சுவரன்சிங்கும் இன்று சுகயீனமுற்று டில்லி ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். பிரதமர் மொரார்ஜி தேசாய், பதில் ஜனுதிபதி ஜட்டி ஆகியோர் உட்பட பல தலைவர்கள் சுவரன்சிங்கைச் சென்றுபார்த்தனர்

முன்னுள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை புதிய பிரதமர் மொரார்ஜிதேசாய் அவரது இல்லத்துக்குச்சென்று சந்தித்தார். இந்திராவின் வாழ்த்துச் செய்திக்கு மொரார்ஜி நன்றிதெரிவித்துக்கொண்டார்.

அரசுடன் ஜெகஜீவன்ராம் தலைமையிலான ஜனநாயக காங்கிரஸ் சேரவேண்டும் என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் கருத்துவெளியிட்டிருக்கிறுர். (ஆ)

# லோகசபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்

புதுடில்லி, மார்ச் 25

லோகசபைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளஉறுப்பினர்கள் இன்று பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள்.

முதுபெரும்உறுப்பினர் திரு. திவாரி தற்காலிக சபாநாயகராகச் சபையில் வீற்றிருந்தார்.

முதலில் ஜனதா கட்சித் தலைவரும்பிரதமமந்திரியுமான திரு. மொரார்ஜி தேசாயும் அவரையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவானும் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். இவர்களைத்தொடர்ந்து அங்கத்தவர்கள் அகரவரிசையில் ஆந்திர மாநிலம் தொடங்கி மாநில வாரியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

இதற்குமுன்பு திரு திவாரி ஜனுதிபதி மாளிகைக்குச் சென்று பதில்ஜனுதிபதி திரு. ஜெட்டி முன்னிலையில் தற்காலிக சபாநாயகராக பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

லோகசபையில் இதுவரை காலமும் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தஉறுப்பினர்களில் பலபேர் அரசாங்கப் பகுதியிலும் பலவருடங்களாக அரசாங்கதரப்பில் அமர்ந்துவந்த பலபேர் எதிர்க்கட்சியிலும் காணப்பட்டனர்.

பிரதமமந்திரி சபைக்கு வந்ததும் உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர். எதிர்க்கட்சித் தலைவர் திரு. சவான், காங்கிரஸ் தலைவர் திரு. பருவா ஆகியவர்களுடன் திரு. தேசாய் கைகுலுக்கினுர்.

தற்காலிக சபாநாயகர் பேசும்போது உறுப்பினர்கள் மீது மக்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறுர்கள். அந்த நம்பிக்கைகளுக்கமைய உறுப்பினர்கள் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன் என்ருர்.

### கருணுகரன் பதவி ஏற்ருர்

புதுடில்லி, மார்ச் 25

கேரள முதலமைச்சராக திரு கருணுகரன் இன்று பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் முன்னுள் முதல்வர் திரு. அச்சுதமேனன் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### இன்றுபரதநாட்டிய அரங்கேற்றம்

நல்லூர், சனி

சதங்கை நர்த்தனுலய ஆசிரியை திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவி செல்வி சத்தியபாமாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்றுமாலை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வட்டு. வளாகமாணவர் தாக்குதல்: சந்தேக நபர்கள் பிணையில் சென்றனர்

மாவிட்டபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை வளாக மாணவர் தாக்குதல் சம்பவம் குறித்து அடையாளம் காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இரு நபர்களும் தலா 1000 ரூபா பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்துச் சந்தேகத்தின பேரில் கைதான நபர்களையும் அடையாளம் காண்பதற்கான அடையாள அணிவகுப்பு அண்மையில் மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்றதையடுத்து ஏனையநபர்கள் பிணையில் விடப்பட்டு அடையாளம் காட்டப்பட்ட இருவர் மட்டும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஜோன் ஜேசுதாஸ், கிளிநொச்சியைச் சேர்ந்த இராமலிங்கம்அபயகரன்ஆகிய மேற்படி இரு நபர்களும் மீண்டும் மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிபதி திரு.டி. ஜேசுரத்தினம் அவர்களை தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தாா. (அ)

### இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,சனி

நல்லூர் கொன்றையடி ஸ்ரீவயிரவ சுவாமி கோவில் கும்பாபிஷேக மண்டலபூர்த்தியை முன்னிட்டு இன்று மகாசங்காபிஷேகமும் தண்டிகைத் திருவிழாவும் நடைபெறும். வித்துவான் க.சொக்கலிங்கம் ஆசிரியர் சி.சீவரத்தினம் ஆகியோரின் விரிவுரைகளும் இடம் பெறவுள்ளது.

# 5 வாலிபர்களுடன் யுவதியும் றிமாண்டில்

## உத்தியோக ஆசையால் சீரழிந்தாரா?

கிளிநொச்சி, வெள்ளி

ஐந்து வாலிபர்களுடன் சந்தேகத்துக்கிடமான விதத்தில் அறை ஒன்றில் காணப்பட்டதாகக் கூறப்படும் ஒரு இளம் பெண் கிளிநொச்சி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

கிளிநொச்சியில் வைத்து மேற்படி அறுவரையும் கிளிநொச்சி பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ரி. வணிகசுந்தரா கைதுசெய்தார்.

விசாரணையின் போது அராலியைச் சேர்ந்த பிரஸ்தாப இளம்பெண்ணை கிளிநொச்சிப் பகுதி வாலிபர்ஒருவர் அரசாங்கத்தில் அவருக்கு வேலை பெற்றுத்தருவதாகஆசைவார்த்தை கூறி கிளிநொச்சிக்கு அழைத்து வந்ததாகத்தெரியவந்துள்ளது.

பதினெட்டு வயது நிரம்பிய பிரஸ்தாப இளம்பெண்ணையும், வாலிபர்களையும் கிளிநொச்சி நீதவான் திரு. எஸ். இராசநாதன் முன்னிலையில் கிளிநொச்சி பொலிஸ் அதிகாரி ஜனுப் நூர்தீன் ஆஜர் செய்தார். ஏப்ரல்மாதம் 6ம் திகதி வரை இவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் இரு வாலிபர்கள் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் ஒருவரான உபதபாலதிபர் என்று கூறப்படும் வாலிபர் நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்படும்வரை ஏனையவர்கள் றிமாண்டில் வைக்கப்படுவர். (உ)

### தமிழ்நாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவர்னர் மோகன்லால் சுக்கார்ட்டியா பொதுத்தேர்தலின்போது ஒருபக்கச் சார்பாக நடந்துகொண்டதாக புகார் ஒன்றைத் தெரிவித்து புதிய பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ராஜ்பவனிலிருந்து காங்கிரஸாரின் தேர்தல் நடவடிக்கை உத்தரவுகள் நடைபெற்றதாக டாக்டர் ஹண்டே குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏச். வி. ஹண்டே அண்ணு திராவிடமுன்னேற்றக்கழக பொதுச்செயலாளராக இருந்தவர். (ஆ)

### ஜெகஜீவன் உதவிப்பிரதமர்?

இந்தியாவில் ஜெகஜீவன்ராம் உதவிப்பிரதமர்பதவியை கேட்பதாகவும், இதனை ஜனதா கட்சியில்சிலர்எதிர்ப்பதாகவும் கடைசியாகக் கிடைத்தசெய்திகள் கூறின.

## மரண அறிவித்தல்

### திருமதி மனேரஞ்சிதம் (ரதி) சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த திருமதி மனேரஞ்சிதம் (ரதி) சோமசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் கொட்டடி மரக்காலை உரிமையாளர் விநாசித்தம்பி சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், திரு. சிவகுரு பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி பசுபதிப்பிள்ளை ஆகியோரின் இளைய மகளும், செல்வன்கள் கேதீஸ்வரன்,ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், செல்விகள் ஆனந்தகௌரி, மனேகௌரி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று (26-3-77) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் 18, சிவன்பண்ணை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து வில்லூன்றி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத் தகவலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

5799

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் நாகநாதபிள்ளை

புங்குடுதீவு – ஊரைதீவைச் சேர்ந்தவரும் பஞ்சிகாவத்தைப் பிரபல வர்த்தகருமான சிற்றம்பலம் நாகநாதபிள்ளை காலமானுர். இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சட்டவரைநர் திணைக்களத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பாலசிங்கம், நாகம்மா, தங்கலெட்சுமி பஞ்சிகாவத்தை வர்த்தகர் சிவலிங்கம், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திசபையைச் சேர்ந்தவர்களான சேனுதிராசா, ஜெகதீசன், மற்றும் இரத்தினபூவதி, பஞ்சலிங்கம் ஆகியோரின் தந்தையாரும் புங்குடுதீவு துரைச்சாமி வித்தியாசாலை அதிபர் இலகுப்பிள்ளை புங்குடுதீவு தபால் கந்தோரைச் சேர்ந்த சபாரத்தினம், தண்ணீரூற்றுப் பிரபல வர்த்தகர் சேதுராமலிங்கம் நாகேஸ்வரி இராசம்மா, ரஞ்சனுதேவி ஆகியோரின் மாமனுருமாவார். அன்னுரது பூதவுடல இன்று 26-3-77 சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தகனக்கிரியைக்காகக் கோதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

5759

## முக்கிய அறிவித்தல்

### துன்னலை

### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இத் திருப்பணியின் பேரில் போலி நபர்கள் பணம் சேர்த்து வருவதாக அறிகிறேம். இத்திருப்பணிக்கு பணம் கொடுத்து உதவும் பொதுமக்கள் இக்கோவிலின் பரிபாலனசபை உறுப்பினர்களான திருவாளர்கள் வி. செல்லத்தம்பி ஜே. பி. யு. எம்., கே. கணபதிப்பிள்ளை ஜே. பி., எஸ். வி. சிவசுப்பிரமணியம், எஸ். வல்லிபுரம், பி. இராமலிங்கம், த. கெங்காதரம், எஸ். எம். கந்தசாமி ஆகியோரிடமும் புலோலியில் என். கிருஷ்ணகுமார், மட்டக்களப்பில் இ. மு. பெரியதம்பி, மு. சிவகுருநாதன் ஆகியோரிடமும் மேற்படி கோவில் காரியாலயத்திலும் திருப்பணிக்கான பணத்தைக் கொடுக்கும்படி வேண்டுகிறேம்.

மு. கு: பணம் கொடுப்பவருக்கு உடனடியாகப் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

கே. கணபதிப்பிள்ளை ஜே. பி.,
நிருவாக அதிகாரி / தனுதிகாரி,
தர்மகர்த்தாசபை.

5785

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.